

# செங்காந்தள் - அறம்

முனைவர் லீ. பெலிண்டா & முனைவர் ச. தனலெட்சுமி

புத்தகக்குறிப்பு

9 789391 115265



# செங்காந்தள் - அறம்

## Title Verso

**Title of the Book**: **Chenkaantal - Aram**

**புத்தகத்தலைப்பு: செங்காந்தள் - அறம்**

**Editors'** : **Dr. L. Felinda & Dr. S. Dhanalakshmi**
**First Edition** : 2022
**Pages** : 117
**Price** : 350
**ISBN Number**: 978-93-91115-26-5

PUBLISHER : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001,
Tamil Nadu.

PRINTER : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001,
Tamil Nadu.

**பதிப்புரிமை / Copyright © 2022 கட்டுரையாளர்களுக்கு /Authors'**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

# செங்காந்தள்

குறிஞ்சி நில தெய்வமான முருகனின் அடையாளப்பூ செங்காந்தள்பூ. போர் கடவுளான முருகன் பிறந்த கார்த்திகை மாதத்தில் இதன் பூ அகல்விளக்கு போல பூப்பதால் கார்த்திகைப்பூ என்று அழைக்கப்படுகிறது. *கரும்பு மூசாசச் சுடர்பூங் காந்தள் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்யன்* என்ற திருமுருகாற்றுப்படை பாடல் வண்டு இனங்கள் மொய்க்காத நல்ல மணமுடைய, நெருப்புப் போன்ற செந்நிறம் மற்றும் ஒளியுள்ள செங்காந்தள் பூவாலாகிய குளிர்ச்சியுடைய மாலையைச் சூடியவன் *முருகன்* என்று வர்ணிக்கிறது. தமிழர்களின் வீரம் மற்றும் கலாச்சாரப் பெருமையை அடையாளப்படுத்தும் செங்காந்தள் மலரின் பெயரையே இவ்ஆய்வுநூல் வரிசைக்குச் சூட்டுவதழில் அகமகிழ்வடைகிறேன்.

செங்காந்தளின் அழகிய முகை தன் இதழ் விரியும் வரை வண்டுகளைக் காத்திருக்க வைக்காமல் வண்டு வந்தவுடன் அதனை எதிர்நோக்கி தம் இதழை விரித்து தேனைத் தந்து வண்டினை மகிழ்ச்சிப்படுத்தும். செங்காந்தள் தன்னுள் உள்ள தேனை அடக்கி வைத்திருப்பது போன்று கல்தோன்றி மண்தோன்றா காலந்தொட்டே தமிழ்மொழி அரிய இனிய செய்திகளைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது.

தேனைப் பருக வண்டுகள் அணிவகுப்பது போல் தமிழ்ச் சமூகம் தமிழ்த்தேன் பருக தமிழ்ப்பேராசிரியர்கள், ஆர்வலர்கள் தங்கள் எழுத்தாற்றலை அர்ப்பணிக்க ஆயத்தமாயுள்ளனர். தமிழ் ஆர்வலர்களுக்காகத் துளிர்விடும் இந்நூல் பயணத்திற்குச் செங்காந்தள் என்று பெயரிட்டது சாலப் பொருந்தும்.

முருகன் என்றால் அழகன். அவன் கார்த்திகை மலரைச்சூடி பேரழகுடன் திகழ்வது போல் தமிழின் பல்வகை இலக்கிய செய்திகளைப் புதிய ஆய்வு நோக்கத்துடன் தமிழ்மொழியில் மாலையாகத் தொடுத்து வெளிக்கொணர்வதில் இச்செங்காந்தள் பயணம் இனிதே மலர்கிறது.

# செங்காந்தள் புத்தகப் பகுதி

## Editorial Board / ஆசிரியர் குழு

**முனைவர் ஜெ. கவிதா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பூசாகோ அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர் - 641004,
தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** kavithamahendiran1973@gmail.com

**முனைவர் தி. பரிமளா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,
மதுரை – 625004, தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** jeyamadhan05@gmail.com

**முனைவர் செ. சாந்தி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி - 626123,
தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** shanthi_sf607@anjaconline.org

**முனைவர் ஆ. மகாலட்சுமி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி - 642001,
தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** mahalakshmia83@gmail.com

**முனைவர் நா. குமாரி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அக்சிலியம் கல்லூரி,
வேலூர்-6,
தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** jeevikumarioct31@gmail.com

**முனைவர் சீ. விமல்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மதுரைக்கல்லூரி
மதுரை,
தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** vimal.vanji2015in@gmail.com

**முனைவர் ப. சசிரேகா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
குரு நானக் கல்லூரி,
சென்னை – 600042,
தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** sasirekatamil05@gmail.com

**முனைவர் த. மகேஸ்வரி,**
பாண்டியன் கல்வி அறக்கட்டளை,
விருதுநகர் – 626001.
தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** dmakesh88@gmail.com

**மு. சுமதி**,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ வித்யா கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:**
sumathisanjay67@gmail.com

**பொன். கனகா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வ. உ. சிதம்பரம் கல்லூரி,
தூத்துக்குடி,
தமிழ்நாடு, இந்தியா.
**மின்னஞ்சல்:** pon9514425928@gmail.com

## ஆசிரியர் குழு பணி விவரம்

இந்த சிறப்பிதழ் குழு, (எடிட்டோரியல்) நேர்மையான பதிப்பு நெறிமுறைகளின் படி அறிவார்ந்த கட்டுரைகளை நெறிமுறைக் கொள்கைகளுடன் தொகுத்துள்ளது. இது சமர்ப்பித்தல், கருத்துத் திருட்டு சரிபார்ப்பு, திருத்தங்கள், சக மதிப்பாய்வு செயல்முறை, (டபுள் பிளைண்ட்), பெரிய திருத்தங்கள் அல்லது சிறிய திருத்தங்கள், பரிந்துரைகள் மற்றும் திருத்தம், ஏற்பு, மூல கோப்பு தயாரித்தல் மற்றும் இணையதள தயாரிப்பு மற்றும் வெளியீடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

## Editorial Work Flow Details

This Editorial committee curated the scholarly articles with ethical principles according to the norms of the Editorial workflow. It contains submission, plagiarism check, correction, the peer review process, (Double Blind), major corrections or minor corrections, suggestions and rectifications, acceptance, copy editing and production and publication online.

# மதிப்புரை



**முனைவர் ச. தனலெட்சுமி**
**உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை,**
**தி ஸ்டாண்டர்டு ஃ பயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா.**

பொன். கனகா அவர்கள் படைத்துள்ள "**பண்டைத் தமிழரின் வாழ்வியல் அறங்கள்**" என்ற கட்டுரையில், சங்க இலக்கியங்கள் பண்டையத் தமிழ்ச் சமூகத்தினைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக அமைந்துள்ள பாங்கினை விளக்கியுள்ளார். தமிழர் களவியலும், கற்பியலும் பின்பற்ற வேண்டிய அறங்களைச் சிறப்பாகத் தொகுத்துரைத்துள்ளார். ஆட்சி அறம், சான்றோரின் அறம், போர் அறம், பொருளீட்டல் அறம், நீர் பேணுமறம், உழவு காத்தலறம், பொதுமை அறம் போன்ற அறங்களைத் தகுந்த சங்க இலக்கியச் சான்றாதாரங்களுடன் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். சங்க கால மக்கள் அகவாழ்க்கை மற்றும் புறவாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களை நன்முறையில் அறிவுறுத்தியுள்ளார்.

முனைவர் ரா. குமாரி அவர்கள் "**புறநானூற்றில் மானுட அறங்கள்**" என்ற தலைப்பில் சங்க இலக்கியப் பேழை என்று அழைக்கப்படும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ள மறத்தில் மானுட அறம், போர் அறம், காலத்தை வென்ற மானுட அறம், ஈகை அறம், கல்வி அறம் குறித்த அறங்களைச் சிறப்பாக பட்டியலிட்டுள்ளார். வீரத்தாயாரின் சிறப்புகளையும் கூறியுள்ளார். புகழ்வது போல் இகழ்ந்த புலமைத் திறத்தையும் போரைத் தடுக்கும் மனிதநேயத்தையும் எடுத்துக் கூறியுள்ளார். இயற்கையோடு வாழ்ந்த மனிதன் தன்னையும், தன்னைப் போன்ற பிற உயிர்களையும் துன்பத்தில் இருந்து விடுவிக்கும் நல்வழிப்படுத்தும் மானுட அறத்தைப் போற்றியுள்ளார்.

முனைவர் வி. தமிழ்மொழி அவர்களது “**வைதீக மற்றும் அவைதீக மரபில் அறம்**” என்ற கட்டுரை உலகில் மாந்தர், சமுதாயமாக வாழத் தொடங்கிய காலந்தொட்டே அறங்கள் தொடங்கிவிட்டன என்றும் மனித வாழ்வின் எல்லாத் தளங்களிலும் நீக்கமற நிறைந்து நிற்பது அறமாகும் என்று நிறுவியுள்ளார். மனிதர்களது வாழும் நிலையில் அவர்களது ஒவ்வொரு அசைவையும் தீர்மானித்தது அறமே என்று நேர்த்தியுடன் நிறுவியுள்ளார். மனிதர்கள் எப்படி வாழ வேண்டும் எனத் தீர்மானிப்பதே அறம் சார்ந்த முடிவாகும். மேலும், அறம் என்பது இனம், மொழி, சமயம் கடந்ததாகும் என்று நிறுவுகிறார். இன்றைய சிக்கலான மத பிரச்சனைகள் உள்ள சூழலில் இக்கருத்துக்கள் நல்ல வழிகாட்டுதலாக அமையும் என்பது தின்னம்.

முனைவர் க. புவனேஸ்வரி அவர்கள் "**திருமந்திரத்தில் அறம்**" என்ற தலைப்பில் வழங்கியுள்ள கட்டுரையில், பதினெண் சித்தர்களுள் முதன்மையானவரான திருமூலர் இயற்றிய திருமந்திரத்தில் கூறியுள்ள அறங்களைச் சிறப்பாகப் பதிவிட்டுள்ளார். இறைவனை அடைவதற்கு மனிதன் நல்லவனாக அறச்சிந்தனை உடையவனாக இருத்தல் அவசியம் என்பதைத் தன் கட்டுரையில் அறிவுறுத்தியுள்ளார். அறம் செய்வான் திறத்தையும், அறம் செய்யான் திறத்தையும் தானச் சிறப்பினையும், பிறர்மனை நயவா பேராண்மையினையும், புலால் மறுத்தலையும் விளக்கியுள்ளார். அறம் என்பதனைத் தமிழ் சான்றோர் தம் வாழ்வியல் நெறியாகவே கொண்டு வாழ்ந்து வந்துள்ள இச்செய்தியினைத் தம் கட்டுரையில் கூறியுள்ளார்.

முனைவர் ரா. ஜெய்சங்கர் அவர்கள் "**அற இலக்கியங்களில் இல்லறக் கோட்பாடுகள்**" என்ற தலைப்பில் இல்லறக் கொள்கைகளைப் பற்றி விளக்கம் அளித்துள்ளார். இல்லறத்தில் ஈடுபடுவது குறித்தும், இல்லறத்தாரின் கடமைகளையும், விருந்தோம்பும் பண்புகளையும் இல்லற மாண்புகளையும் வரிசைப்படுத்திக் கூறியுள்ளார். இல்லத்தானின் சிறப்பு, நன்றி மறவாதிருத்தல் திறத்தையும் எடுத்துக் கூறியுள்ளார். தமிழ்ப் பண்பாட்டின் ஆணிவேரான விருந்தோம்பல் சிறப்புகளையும், மனைவி என்பவள் மந்திரி போல மாட்சிமைப் பொருந்தியவள், பேராசை தவிர்த்து, உலக நடப்பை அறிந்து குடும்பம் நடத்த வேண்டிய

மார்க்கத்தினையும், மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்ற அறச்சிந்தனைகளை விதைத்துள்ளார்.

தமிழில் மென்மேலும் இது போன்ற புத்தக பகுதிகள் வெளிவந்து தமிழ் இலக்கியத்தின் தொண்மையினைப் பறை சாற்ற வேண்டும். அது தமிழ் மொழி மற்றும் இலக்கிய பேராசிரியர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் புதிய கோணத்தில் ஆய்வை நடத்திட, ஆய்வு எல்லையை நிறுவ, புதுமையான படைப்புக்களைப் படைக்க, மேற்கோள் காட்ட ஓர் சிறந்த வாய்ப்பினை அளிக்கும் என்பது உறுதி. வாழ்த்துக்கள்.

**நன்றி**

**முனைவர் ச. தனலெட்சுமி**

# உள்ளடக்கம்


| வ. எண் | தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| 1. | பண்டைத் தமிழரின் வாழ்வியல் அறங்கள்<br>பொன். கனகா | 1-35 |
| 2. | புறநானூற்றில் மானுட அறங்கள்<br>முனைவர் நா. குமாரி | 36-51 |
| 3. | வைதீக மற்றும் அவைதீக மரபில் அறம்<br>முனைவர் வி. தமிழ்மொழி | 52-78 |
| 4. | திருமந்திரத்தில் அறம்<br>முனைவர் க. புவனேஸ்வரி | 79-91 |
| 5. | அற இலக்கியங்களில் இல்லறக் கோட்பாடுகள்<br>முனைவர் இரா. ஜெய்சங்கர் | 92-117 |

# Life Virtues of Ancient Tamizhar

**Pon. Kanaga**, Assistant Professor of Tamil, V. O. Chidambaram College, Thoothukkudi, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-4571-443X**
**DOI: 10.5281/zenodo.8149802**

## Abstract

*From the Sangam period to still now so many genre types are created in Tamil literature. Ettuththogai and Pathuppaattu literature written in the Sangam period are called as SangaIlakkiyangal. This literature explained the inner and outer lives of Sangam-age people. The Sangam literature poems were written with the theme of love and heroism. They also showed the ethics in the life of Sangam periodic people. These poems help us to know the higher qualities of the olden Tamil society and be the best guide to our life. Tamil people followed ethics in all aspects of their life. This essay explores the ethics that are followed by Sangam people in ancient Tamil society.*

**Keywords:** Sangam Age, Internal Life, External Life, Ethics.

## References

[1] Kandhaiya, N. C. Maraimalaiyadigal. Raagavaiyangaar, R. Puliyurkesigan. *Paththuppaattu Moolamum Uraium.* SreeSenbaga Publications, Chennai.

 ISBN Number: 978-93-91115-26-5

[2] Sathaasivam Iyar. *Aingurunooru Moolamum Uraium.* Ulaga Tamizhaaychchi Niruvanam, Chennai – 600 013.
[3] Seenivasan, R. *Silappathigaram – Moolamum Uraium.* Aniyagam, Chennai –030.
[4] Thasan, M. *Tholkappaiya Kalanjiyam. Porulathikaaram – Thoguthi 1.* Abila Publications, Kumari – 629 157.
[5] Paramsivan, T.*Bharathithasan Paadalgal.* New Century Book House Private Ltd, Chennai – 098.
[6] Prabhakaran. R. *Kurunthogai Moolamum Eliya Uraium.* Kaviya Publications, Chennai – 024.
[7] Puliyurkesigan. *Aganaanooru Moolamum Uraium.* Sree Senbaga Publications, Chennai -017.
[8] Puliyurkesigan. *Nattrinai Moolamum Uraium.* SreeS enbaga Publications, Chennai -017.
[9] Puliyurkesigan. *Purananooru Moolamum Uraium.* Sree Senbaga Publications, Chennai -017.
[10] Meiyappan, S. *Bharathiyaar Kavithaigal.* Thendral Station, Chidambaram- 608001.
[11] Varatharaasanar, M. *Thirukkural Thelivurai.* Tirunelveli Saiva Siththandha Noorpathippu Kazhagam Pvt. Ltd, Chennai – 600 018.


**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.


ISBN Number: 978-93-91115-26-5

# பண்டைத் தமிழரின் வாழ்வியல் அறங்கள்

**பொன். கனகா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வ. உ. சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-4571-443X**
**DOI: 10.5281/zenodo.8149802**

## ஆய்வுச் சுருக்கம்

*சங்க காலம் முதல் இக்காலம் வவரை தமிழில் பல்வேறு இலக்கியங்கள் படைக்கப்பட்டு வருகின்றன. சங்க காலத்தில் படைக்கப்பட்ட எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய பதினெட்டு நூல்களும் சங்க இலக்கியங்கள் என வழங்கப்படுகிறது. அவை சங்க கால மக்களின் அகவாழ்க்கை மற்றும் புறவாழ்க்கையை எடுத்துயம்புகின்றன. அகம், புறம் என மனித வாழ்வினுக்குரிய காதலையும் வீரத்தையும் பாடுபொருளாகக் கொண்டு பாடப்பெற்ற சங்கப் பாடல்கள், அக்கால மக்களின் வாழ்வியலில் இருந்த அறங்களையும் வெளிப்படுத்துகின்றன. அவை பழங்காலத் தமிழ்ச் சமூகத்தின் உயரிய பண்புகளை அறிய உதவுவதோடு, தக்க வழிகாட்டியாகவும் திகழ்கின்றது. தமிழர்கள், அகவாழ்க்கை & புறவாழ்க்கை என இரண்டிலும் அறத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்துள்ளனர். சங்க இலக்கியங்கள் வழி தொன்றுதொட்டு தமிழ்ச்*

 ISBN Number: 978-93-91115-26-5

*சமூகம் அறநிலை தவறாது வாழ்ந்து வந்துள்ளமை இவ்வாய்வில் அறிய முடிகிறது.*

**குறிப்புச் சொற்கள்:** சங்ககாலம், அகவாழ்க்கை, புறவாழ்க்கை, அறங்கள்.

**முன்னுரை**

சமுதாயத்தில் படைக்கப்படும் இலக்கியங்கள் அனைத்தும் தாம் வாழ்ந்த சமூகத்தின் வாழ்வியலைப் பிரதிபலிக்கின்ற பிம்பங்களாக அமைகின்றன. எனவேதான் அவற்றைக் காலத்தின் குரலாகவும், வரலாற்றின் சாரமாகவும் ஏற்றுக்கொள்கிறோம். அவ்வகையில் சங்க இலக்கியங்கள் பண்டைய தமிழ்ச் சமூகத்தினைப் பிரதிபலிக்கின்றனவாக அமைகின்றது. அவை வெளிப்படுத்துகின்ற சங்க கால மக்களின் வாழ்வியல் அறங்களை, ஆராய்ந்து வெளிக்கொணர்வது இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

**அறம் - சொற்றொடர் விளக்கம்**

'அறம்' என்ற தமிழ்ச் சொல்லுக்கு இணையான அல்லது ஒப்பான சொல் ஆங்கிலத்தில் 'ETHICS' அல்லது 'JUSTICE' ஆகும். அறம் என்ற சொல் விரிந்த பொருளுடையது எனலாம். மனிதன் புரியும் நற்செயல்கள் அனைத்தும் இதில் அடங்கும்.

 ISBN Number: 978-93-91115-26-5

## அறங்களின் தோற்றம்

சமுதாயம் ஒப்புக்கொண்ட பழக்கங்களையும், நடைமுறைகளையும் மக்கள் வாழ்விற்கு உகந்தவை என்ற நிலையில் சான்றோர்கள் அவற்றை அறங்களாக வரையறை செய்துள்ளனர். மக்களை ஒழுங்குபடுத்தி வளர்ப்பதற்கு தலைவன் ஒருவன் கட்டாயம் தேவைப்படுகிறான். அத்தலைவன் அறிவு ஆற்றலோடு திகழ்கின்ற குருவாகவோ, அரசனாகவோ விளங்கியுள்ளான். இவர்கள் கட்டமைத்த ஒழுங்குமுறைகளின் வழி அறங்கள் தோன்றியுள்ளன.

## சங்ககாலமும் அறமும்

தமிழர் பொருள் ஈட்டி அறம்செய்து இன்புற்றனர். இல்வாழ்க்கையை அறவாழ்க்கையாகக் கொண்டனர். உலகே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்களைச் செய்ய மறுத்தனர். சங்க காலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர். சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலமாக சங்ககாலம் விளங்கியது. சங்ககாலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால், சங்க கால அறங்கள் இயல்பானவை.

## அகவாழ்க்கையில் அறம்

பழந்தமிழர் தங்களின் வாழ்வை அகம்,புறம் என


ISBN Number: 978-93-91115-26-5

வகுத்தளித்தனர். உள்ளம் மகிழும் காதல் வாழ்க்கை அகம் எனப்பட்டது. தலைவன் தலைவிக்கு இடையேயான களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கை ஆகியவற்றை அகப்பாடல்கள் உணர்த்துகின்றது.

**களவில் அறம்**

சங்க இலக்கியங்களில் உள்ள அகப்பாடல்களில் எவ்விடத்திலும் தலைவன் தலைவி முதலிய அகத்திணை மாந்தர்களின் இயற்பெயர்கள் குறிப்பிடப்படுவதில்லை. இத்தகைய உறுதியான கட்டுப்பாடு தமிழ் இலக்கியங்களுக்கே உரித்தான அறமாக தனிச்சிறப்பு பெற்று விளங்குகிறது. களவு வாழ்வில், தலைவன் தலைவி மற்றும் அவர்களைச் சார்ந்தவர் முதலானவர்களிடம் வெளிப்படும் உண்மைத் தன்மையே அறமாகக் கருதப்படுகிறது. அகத்திணைப் பாடல்கள், மன & மண ஒழுக்கங்களைக் களவு & கற்பு என்ற இரு வகைகளில் வெளிப்படுத்துகின்றது. இவ்விரண்டையும் இணைத்து நிற்பது அறத்தொடு நிற்றல் என்பதாகும். தலைவியின் களவோழுக்கத்தைப் பிறர்க்கு வெளிப்படுத்துவதற்காகத், தலைவி,தோழி, நற்றாய், செவிலித்தாய் என ஒவ்வொருவரும் அறத்தொடு நிற்பதுண்டு. தலைவியை அவன் விரும்பிய தலைவனுக்குத் திருமணம் செய்வித்தலே இதன் நோக்கமாகும்.

 ISBN Number: 978-93-91115-26-5

**நெடுந்தேர் எந்தை அருங்கடி நீவி**
**இருவேம் ஆய்ந்த மன்றல் இதுஎன**
**நாம் அறவுராலின் பழியும் உண்போ**

**(குறிஞ்சி., பா. 20- 22)**

என்ற குறிஞ்சிப்பாட்டு வரிகள், தலைவி தோழியை அறத்தோடு நிற்க வலியுறுத்தியதை எடுத்தியம்புகின்றன. தலைவிக்கு உடனிருந்து பிறர் அறியாமல் களவுக்கு உதவியவள் தோழி. களவுக் காதலை கற்பாக மாற்றிட, வாய்ப்பு ஏற்படும் பொழுது தோழி செவிலிக்குத், தலைவியின் காதலைக் குறிப்பாகப் புலப்படுத்துகின்றாள்.

**அகவன் மகளே! பாடுக பாட்டே**
**இன்னும் பாடுக பாட்டே அவர்**
**நன்னெடும் குன்றம் பாடிய பாட்டே**

**(குறுந்., பா. 23)**

என்ற குறுந்தொகைப் பாடல், தோழி அறத்தொடு நின்றமையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. இவ்வாறாக, களவு வாழ்க்கையிலும் தங்களின் கற்பொழுக்கம் பிறழாமல் இருக்க, பெண்கள் அறத்தொடு நின்ற நிலைகளைக், சங்க இலக்கியப் பாடல்கள் வழி அறிய முடிகின்றது. அறத்தொடு நிற்கும் இவ்வுயரியப் பண்பு, சங்க காலப் பெண்களின் மாண்பினை விளக்குகின்றது. இன்றைய காலக்கட்டத்தில், களவு

 **ISBN Number: 978-93-91115-26-5**

வாழ்க்கை என்று தங்களின் கற்பினை இழந்து கையறுநிலையில் நிற்கத் துணியும் பெண்களுக்குச், சங்ககால அறத்தொடு நிற்றல்நிலை அவசியமான வாழ்க்கைப்பாடமாகத் திகழ்கின்றது.

**இல்வாழ்க்கையில் அறம்**

இல்வாழ்க்கையை தலைவனும் தலைவியும் அறத்துடன் மேற்கொள்ள வேண்டுமென்பதாலே இல்லறம் என வழங்கப்படுகிறது எனலாம். குடும்பம் என்பது ஆண் பெண் உறவை நெறிப்படுத்த அமைக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். அவ்வமைப்பில் அன்புடன் அறமும் சேரும்போதே அது சிறப்புற்று அமைகிறது. சங்ககாலத்தில் தலைவனும் தலைவியும் தங்களது கற்பு வாழ்க்கையிலும் ஒருவர்மீது ஒருவர் மாறா அன்புடன் விளங்கினர். அவர்களது அன்பு அறமாய் வெளிப்பட்டுள்ளது என்பதை,

**…குவளை உண்கண் குய்ப்புகை கமழத்**
**தான் துழந்தட்ட தீம்புளிப்பாகர்**
**இனிதெனக் கணவர் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே**

**(குறுந்., பா. 133)**

என்ற குறுந்தொகை பாடல் பதிவு செய்கிறது. தலைவி தலைவனுக்காகக் கண்களில் கண்ணீர் வடிய சமைத்த மோர் குழம்பு உணவை பரிமாற, அதனை உண்ட

 ISBN Number: 978-93-91115-26-5

கணவன் உணவின் சுவையையறிந்து அது தீம்புளிக்குழம்பாக இருந்தாலும் இனிது இனிது எனக் கூறி புகழ்ந்து பாராட்டுகின்றான். மனைவி வெட்கத்தால் நாணுகிறாள். இருவருக்கும் இடையே இருந்த அன்பின் பிணைப்பினால் புளிப்பானது கூட இனிப்பாக மாறியது. இது அவர்களது இல்வாழ்வின் அறத்தை உணர்த்துவதாக அமைகிறது.

**இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயோ கியரென் கணவனை**
**யானாகியர் நின்நெஞ்சு நேர்பவளே (குறுந்., பா. 3)**

என்ற நற்றிணைப் பாடலில் தலைவியானவள் தலைவனைப் பற்றிக் கூறும் போது, இந்த பிறவியில் மட்டுமல்லாது அடுத்த பிறவிகளிலும் நீயே என் கணவனாக வேண்டும் என்று பெருமையுடன் கூறுகின்றாள். சங்க மக்கள் அந்த அளவிற்கு இனிய இல்லற வாழ்வினை மேற்கொண்டிருந்தனர் என்பது புலனாகின்றது.

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது (குறள் - 45)**

என்ற குறளில், இல்வாழ்க்கையில், பிறரிடம் செலுத்தும் அன்பும், கணவன் மனைவி சேர்ந்து செய்யும் அறனும் இருக்குமானால், அதுவே இல்வாழ்க்கையின் உயர்வாகும் என்று வள்ளுவர் விளக்குகிறார்.


ISBN Number: 978-93-91115-26-5





**கொண்ட கொழுநன் குடிவற னுற்றெனக்**
**கொடுத்த தந்தை கொழுஞ்சோ றுள்ளாள்**
**ஒழுகுநீர் நுணங்கறல் போலப்**
**பொழுது மறுத்துண்ணும் சிறுமது கையளே**

**(நற்., பா. 11)**

என்ற நற்றினை பாடலில், தலைவி மணந்த கணவரின் குடும்பம் வறுமையுற்றது. நீரோடு கூடிய கஞ்சியை பொழுது மாதிரி உண்ணும் வாழ்க்கையைத் தலைவி அடைகிறாள். அப்படிப்பட்ட நிலையிலும் தன் தந்தையின் பெரும் செல்வத்தினை நினைத்துப் பார்க்கவில்லை. ஒரு காலத்தில், அமுது போன்ற பால் சோற்றை போர்க்கிண்ணத்தில் இட்டு உண்க எனச் சொல்லி செவிலித்தாய் பூக்கோல் கொண்டு அடிக்க, பந்தலில் ஓடி மறைந்தவள் திருமணத்திற்கு பிறகு தனது கணவனது வீட்டில் பொழுது மாறி உண்கிறாள். இத்தகைய வாழ்க்கைத் தத்துவத்தை இவள் எங்கு கற்று கொண்டாள் என்று தாய் வியக்கும் வண்ணம், அத்தலைவியின் இல்லற அறம் ஓங்கி இருக்கின்றது.

கணவன் வீட்டுத் தோட்டத்தில், தழைகள் விழுந்து அழுகி நாற்றம் எடுக்கின்ற, நீர் நிலையில் உள்ள நீரை மான்கள் குடித்துவிட்டு எஞ்சியுள்ள நீரை அவள் உண்கிறாள். அது தன் தாய் வீட்டில் தான் உண்ட தேன்


ISBN Number: 978-93-91115-26-5

கலந்த பாலினும் இனிப்பினைக் கொடுக்கிறது என்று தலைவி கூறுகிறாள். இதனை,

**அன்னை வாழி வேண்டன்னை நம்படப்பை**
**தேன் மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு**
**உவலைக் கூவற்கீழ் மானுண்டெஞ்சிய கலுழி**
**நீரே (ஐங்., பா. 203)**

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் பதிவு செய்கின்றது. இதன் வழி தலைவியின் இல்லற அறத்தினை உணர முடிகிறது.

**ஒரோ தம்முள் தழீஇ ஒரோ**
**ஓகை ஒன்றன் கூறாடை உடுப்பவரே**
**யாயினும் ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை**
**(கலி., பா. 6)**

என்ற பாடல் வரிகள், குடும்பச் சூழ்நிலையில் ஒரு ஆடையைக் கிழித்து, தலைவன் தலைவி இருவரும் முடிந்துக்கொள்ளும் சூழ்நிலை வந்தபோதும், அன்பினால் ஒன்றி வாழ்வதே இல்லறம் என்பதை நிலையான அறமாக ஏற்றுக் கொண்டு வாழ்ந்ததை நமக்கு உணர்த்துகின்றது. இல்லறத்தில் அறங்கள் வழுவுகின்றதாலே, இல்லறம் நல்லறமாய் அமையாமல் அவதிப்படுகின்றனர். கணவன், மனைவி இருவரிடமும் அன்பு எனும் அறம் இருந்துவிட்டால் வாழ்க்கை வசப்படும் என்பதை சங்கப் பாடல்கள் உறுதிப்படுத்துகின்றது.

 ISBN Number: 978-93-91115-26-5

## விருந்தோம்பல் அறம்

சங்கதமிழ் இலக்கியங்கள் இல்லறத்துக்குரிய அறங்களுள் ஒன்றாக விருந்தோம்பலையும் சிறப்பித்துக் கூறுகின்றன.விருந்தோம்பலில் தமிழரே பேர் பெற்றவர்களாவர். பழந்தமிழர் விருந்தோம்பலை வாழ்க்கையின் உயிர்நாடியாகக் கொண்டு வாழ்ந்தனர். 'விருந்து' என்ற சொல் புதுமையைக் குறித்துப் பின்பு ஆகுபெயராய் விருந்தினரைக் குறித்து வழங்கலாயிற்று. ‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே' இல்லறத்தின் தலையாய நெறியாகும். விருந்தோம்பல் இல்லாத வாழ்க்கை இல்வாழ்க்கை ஆகாது. விருந்தோம்பலில் பெண் பெரும்பங்கு பெறுகிறாள்.

**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்**

**(தொல். கற்., நூ. 11)**

என்று தொல்காப்பியம், விருந்தோம்பலையும் சுற்றம் ஓம்பலையும் மனைவிக்கு உரிய மாண்புகளாகச் சுட்டுகிறது.

இல்லறத்தில் கணவன் மனைவியர் இருவரும் இணைந்து விருந்தோம்புவதை சங்க கால மக்கள் அறமாகக் கருதினர். அக்காலத்தில் உணவையோ, உணவுப் பொருள்களையோ கையில் கொண்டு செல்ல முடியாத நிலையிருந்தது. அதனால் உணவின்றி


ISBN Number: 978-93-91115-26-5

வருந்துவோருக்கு உணவளித்தல் இன்றியமையாத அறமாகப் போற்றப்பெற்றது.

**கேளிர்போல கேள் கொளல் வேண்டி**
**வேளாண் வாயில் வேட்பக் கூறி**
**கண்ணில் காண நண்ணுவழி இரீஇ**
**பருகு அன்ன அருகா நோக்கமொடு**

**(பொரு., பா. 74-78)**

என்ற சங்கப் பாடல், விருந்தினரிடம் நண்பனைப்போல உறவு கொண்டு, இனிய சொற்களைக் கூறி, கண்ணில் காணும்படி தனக்கு நெருக்கமாக இருக்கச் செய்து, கன்று ஈன்ற பசு கன்றிடம் காட்டும் அன்பு போல விருந்தினரிடம் அன்புகாட்டி எலும்பே குளிரும்படியான அன்பால் நெகிழச் செய்ய வேண்டும் என விருந்தினர் ஓம்பும் முறையைக் கூறுகின்றது.

பல வகையான உணவினை, விண்மீன்கள் போல கிண்ணத்தில் பரப்பி விருந்தினரை அன்போடு நோக்கி, அவர்கள் விரும்பியதைக் குறிப்பறிந்து கொடுத்து ஓம்ப வேண்டும் என்பதை, பின்வரும் பாடல் குறிப்பிடுகின்றது.

**மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி**
**மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து**
**ஆனா விருப்பின் தானின்று ஊட்டி**

**(பெரும்பா., பா. 477-479)**

 ISBN Number: 978-93-91115-26-5

இளங்கோவடிகள் தமது காப்பியமான சிலப்பதிகாரத்தில், விருந்திடும் மரபைக் குறிப்பிட்டுள்ளார். கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்த நிலையில்,

**அறவோர் களித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை**

**(சிலம்பு., 71-73)**

எனக் கூறி வருந்துகின்றாள். இளங்கோவடிகள் 'தொல்லோர் சிறப்பின்' என்று விருந்துக்கு அடை கொடுத்துக் கூறியதால், இது தமிழரின் தொன்மையான பழக்கவழக்கம் என்பதும், முன்னோர் வகுத்த முறைப்படி விருந்தல் வேண்டும் என்பதும் புலனாகிறது.

**பொன்துலங்கு மேனி**
**புதுமெருகு கொள்ள மேனி**
**அன்றலர்ந்த செந்தா**
**மரையாக-நன்றே**
**வரவேற்பாள் (குடும்ப விளக்கு–II)**

என்று பாவேந்தர் பாரதிதாசன், இக்கால மகளிர் விருந்தினரை வரவேற்று ஓம்புதலைக் குறிப்பிடுகிறார். விருந்தோம்பலுக்கு பெயர்பெற்று விளங்கிய தமிழர்களிடம், இன்று விருந்தோம்பல் மன்றி வருவதைக் காண முடிகிறது. இன்றைய இயந்திர உலகில்,

 ISBN Number: 978-93-91115-26-5

மனிதர்களும் இயந்திரமாய் மாறி ஓடிக்கொண்டே இருப்பதால் உறவுகளும் உணர்வுகளும் உதாசீனம் அடைந்துவிட்டன. அவற்றை தள்ளிவைத்து நமது உறவுகளோடு உண்டு மகிழ்ந்து அறத்தை வளர்க்க வேண்டும் என்ற உணர்வினை சங்க இலக்கியங்கள் ஏற்படுத்துகின்றன.

**ஈகை அறம்**

இல்லை என்பவருக்கு இருப்பவர் கொடுப்பது உதவுகின்ற ஈகை அறம் உயர்ந்த ஒழுக்கம் ஆகும். சங்க கால மக்கள் பொருள் ஈட்டுவதே பிறருக்கு ஈவதற்காக என்று வாழ்ந்துள்ளனர். சங்ககால மக்களிடம் ஈகை அறம் மேலோங்கி இருந்துள்ளது என்பதை,

**ஒண்ணுதல் மகளிர் துணிந்த கண்ணினும்**
**இரவலர் புன்கண் அஞ்சும், (பதிற்., பா. 57)**
**செல்வத்துப் பயனே ஈதல் (புற., பா. 189)**

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. உலகம் நிலை இல்லாதது, உலகத்தில் உள்ளவர்கள் அனைவருக்கும் உண்பது நாழியும் உடுப்பவை இரண்டுமே ஆகும் என்பதை,

**உண்பது நாழி உடுப்பவை இரண்டே**
**பிறவும் எல்லாம் ஓர் ஒக்குமே (புற., பா. 189)**

என்ற வரிகள் உணர்த்துகின்றது.

**ஆற்றாமாக்கள் அரும்பசி களைவார்**

 ISBN Number: 978-93-91115-26-5

**மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை**

**(மணி., 93 - 94)**

என்ற மணிமேகலை அடிகள், குருடர், முடவர், செவிடர், ஆதரவற்றோர், நோயாளிகள் போன்ற எளிய மக்களுக்குச் செய்யப்படுகின்ற உதவியே உண்மையான அறம் என்பதை குறிப்பிடுகின்றது.

**ஈயென இரத்தல் இழிந்தன்று**
**ஈயேன்எனல் அதனினும் இழிந்தன்று**
**கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று**
**கொள்ளனெனல் அதனினும் உயர்ந்தன்று**

**(புறம்., பா. 204)**

என்ற புறநானூற்றுப் பாடல், ஏழைகளுக்குத் தர்மம் செய்வதால், இப்பிறவியில் புகழும் மறுபிறவியில் நற்கதியும் கிடைக்கும் என்பதை எண்ணி, ஒருவன் தன்னை நாடிவரும் ஏழைக்குத் தன்னால் கொடுக்க முடிந்த பொருட்களைக் கொடுத்து உதவ வேண்டும். அவ்வாறு கொடுத்து உதவ முடியாதபடி அவன் வறுமையடைந்து போகும்போது, பிறரிடம் சென்று யாசிக்காமல் இருத்தல் தர்மம் செய்ததை விட இருமடங்கு பெருமையை அவனுக்குத் தருவதாகும் என்பதைக் கூறுகிறது.

தருமம் செய்தல் மிகச்சிறந்த அறம் ஆகும். இம்மையிலே சிறந்த புகழும், இல்லறம் ஆற்றலாகிய


ISBN Number: 978-93-91115-26-5

இன்ப வாழ்வும், மறுமைக்கு இன்பம் தருதலாகிய கொடையும் ஒருவனுக்கு இன்றியமையாது என்பதை,

**இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்**
**அசையுநர் இருந்தோர்க்கு அரும்புணர்வு**
**இன்பமென (நற்., பா. 214)**

என்ற வரிகள், இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் தருவதே அறம் என வலியுறுத்துகிறது.

**இரந்தோர்க்கு ஈயாது ஈட்டியோன் பொருள்போல**
**புரந்து வெளிப்படாதாகி**
**வருந்துக தில்லமாய் ஓம்பிய நலனே (அக., 276)**

என்ற அடிகள், பொருள்மீது பற்றுகொண்டு ஈட்டினால், அப்பொருள் இல்லாது போய்விடும். இரந்தாருக்கு அவர் வேண்டிய ஒன்றினைக் கொடுத்து உதவாத செல்வம், பிறரால் அறியப்படாது கெட்டு அழியும் என்கிறது. தலைவியின் தாய் பேணிப் பாதுகாத்து வளர்த்த அவள் அழகும், பிறர்க்கு உதவாமல் வைக்கின்ற செல்வமும் துன்புற்று அழியும் என்று உவமையின் மூலம் ஈதல் அறத்தைக் குறிப்பிடுகிறது.

**சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்**
**ஈதல் இயையாக் கடை (குறள் - 230)**

என்ற குறளில், உண்மையான சிறந்த செல்வம் என்பது, தன்னைச் சார்ந்து அடைக்கலமாக வந்தவரின் துன்பத்தை நீக்குவதே என்றும்,


**ISBN Number: 978-93-91115-26-5**

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு (குறள் - 231)**

என்ற குறளில், ஈதலறத்தின் சிறப்பினையும் வள்ளுவர் குறிப்பிடுகிறார். பணம், பொருள், சொத்து சேர்க்க வேண்டும் என்று வெறிபிடித்து அலையும் மனிதர்களுக்கு, சங்க கால ஈகையறம் தக்க பாடமாகத் திகழ்கிறது. யாரும் எதையும் கொண்டு வரவில்லை, கொண்டு போவதுமில்லை. எனவே, வாழ்கின்ற சிறிய காலத்தில் தன்னால் இயண்ட்ர் அளவுக்கு பிறருக்கு பயனுள்ள வாழ்வினை மேற்கொண்டு வாழ்வோம்.

## புறவாழ்க்கையில் அறம்

சங்கத் தமிழர் வீரம், கல்வி, கொடை,அரசு முதலானவை அடங்கிய சமூகவாழ்வை புறம் என்றும் பகுத்து வாழ்ந்தனர். அவற்றை பாடுபொருளாகக் கொண்டு புறப்பாடல்கள் அமைகின்றன.

## கொடையறம்

சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகின்ற, பேகன், பாரி, காரி, ஆய், அதியமான், நல்லி, ஓரி முதலிய எழுவரும் அவர்களது கொடைத் தன்மையால் "கடையேழு வள்ளல்கள்" என்ற சிறப்புடன் புகழ்பெற்றுத் திகழ்கின்றனர்.

**காண மஞ்ஞுக்குக் கலிங்கம் நல்கிய**
**அருந்நிறல் அணங்கின் ஆவியர் பெருமகன்**

 ISBN Number: 978-93-91115-26-5

**பெருங்கல் நாடன் பேகனும்**

**(சிறுபாண்., பா. 84-87)**

**பறம்பின் கோமான் பாரியும் (சிறுபாண்., பா. 91)**

**காரி ஊர்ந்து பேர் அமர்க் கடந்த**

**மாறி ஈகை, மறப்போர் மலையனும் (புற., பா. 158)**

**கழல்தொடி ஆஅய் மழை தவழ் பொதியில்**

**(குறு., பா. 84)**

**நளிமலை நாடன் நள்ளியும் (சிறுபாண்., பா. 107)**

**மாரி வண் மகிழ் ஓரி கொல்லிக்**

**கலி மயில் கலாவத்து அன்ன (நற்., பா. 265)**

என்ற சங்க இலக்கியப் பாடல்கள், கடையேழு வள்ளல்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது.

- பேகன், மயிலுக்குப் போர்வையை ஈந்தான்.
- பாரி, முல்லைக்குத் தேரை வழங்கினான்.
- ஆய், மன்னன் ஒளிமிக்க நீல மணியினையும், நாகம் கொடுத்த கலிங்கத்தையும் விருப்பத்தோடு சிவனுக்கு கொடுத்தான்.
- காரி, வறுமையால் வருந்தி வந்த இரவலர்களுக்கு வாரி வழங்கினான்.
- அதியமான், தனக்குக் கிடைத்த நரை, திரை, மூப்பு, சாக்காடு ஆகியவற்றை நீக்கி, இரவாத் தன்மை கொடுக்கின்ற சுவை மிக்க அரிய நெல்லிக்கனியை, தான் உண்ணாது அவ்வையின்

 ISBN Number: 978-93-91115-26-5

சங்கத்தமிழ் நீண்ட காலம் வாழ வேண்டும் என்பதற்காக அவ்வைக்கு அன்போடு வழங்கி மகிழ்ந்தான்.

- நல்லி, தன்னிடம் இருக்கும் பொருளை அன்பு காட்டுவோர் மனம் மகிழுமாறு குறைவில்லாமல் கொடுத்து மகிழ்ந்தான்.
- ஓரி, கூத்தர்களுக்குக் கொடைகளை வாரி வழங்கினான்.

கடையேழு வள்ளல்கள் மட்டுமல்லாது பல்வேறு மன்னர்களும் உயிர்க்கொடை, பெருங்கொடை, கலைக்கொடை என கொடையறத் தன்மையோடு வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களது கொடையறத்தினாலே, வள்ளல்களாக வரலாற்றின் பக்கங்களில் இன்றும் வாழ்கின்றனர்.

## ஆட்சி அறம்

மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழி. ஒரு நாட்டின் அரசன் அறத்தோடு ஆட்சி புரிந்தாலே அம்மக்களும் அற வாழ்க்கை மேற்கொள்ளுவர். அரசன் தன்னை நம்பி வருபவர்களை காக்கின்ற அறமுடையவனாகத் திகழ வேண்டும் என்பதை,

**நசைகொண்டு நம்நீழல் சேர்ந்தாரைத் தாங்கிதம்**
**ஆசைபரந்து உலகுஏத்த ஏதில் நாட்டு உறைபவர்**
**(கலி., பா. 26)**

 ISBN Number: 978-93-91115-26-5

என்ற வரிகள் உணர்த்துகின்றது. ஒரு அரசன், தன்னை நாடி பொருள் வேண்டி வந்த மக்களுக்கு இல்லை என்று கூறி அனுப்புவது முறையல்ல. அவ்வாறு செய்வது அறமும் அல்ல என்று எண்ணி வாழ்ந்ததை, **இடன் இன்றி இறந்தோர்க்கு ஒன்றுஈயாமை இழிவு (கலி., பா. 2)** என்ற பாடல் அடி உணர்த்துகின்றது. பொருள் இல்லை என்று கூறி அனுப்பினால், அவன் தவறான செயலில் ஈடுபட்டு நாட்டில் அறம் சீர் குலைய அவனே வழிவகுத்தவன் ஆகிவிடுவான். எனவே, தனது நாட்டில் அறம் சீர்கெடாது காக்க அரசன் செயல்பட்டுள்ளமை அறியமுடிகிறது.

அரசியல் நீதியைப் பற்றிக் கூறும்போது, மன்னனிடம் இருக்கவேண்டிய அறப்பண்புகளாக சமண முனிவர்கள் ஏழு வகையான அறிவுரைகளை எடுத்துரைக்கிறார்கள். அவை 1.கற்க வேண்டிய நூல்களைக் கற்று அதன்படி நடப்பது; 2.நற்குடியில் பிறந்தாரின் தன்மையை பெற்றெடுத்தல்; 3.மேலான குணங்களைக் கொண்டிருத்தல்; 4.பெரியோரிடத்தில் தவறு செய்யாமல் இருத்தல்; 5.நற்பண்பு உடையோரது கூட்டத்தில் இணைந்திருத்தல்; 6.பெருந்தன்மை குணம் கொண்டு இருத்தல்; 7.எச்செயலிலும் முயன்று வெற்றி காண்பது.

கொடிய சினம் உடைய யானைகள், உயர்ந்த தேர்கள், ஓடும் குதிரைகள், மன வலிமை உடைய போரை


ISBN Number: 978-93-91115-26-5

விரும்புகின்ற வீரர்கள், என சிறப்புடைய நான்கு படைகள் இருந்தாலும், அரசனது வெற்றி மாட்சிமை உடைய அற நெறியை அடிப்படையாகக் கொண்டது. ஒருவர் நம்முடையவர் என்றும், சுற்றத்தினர் என்றும், செய்த தவறுக்கு மன்னிப்பு தருவதும் அறமற்ற செயலாகும். தவறு செய்பவரைக் கதிரவனைப் போன்ற காய்ந்த சினம் கொண்டு தண்டிப்பதே அறம் என்பதை,

**கடுஞ்சினத்த கொல் களிறும்**

**கதழ்பரிய கலமாவும்**

**... அறநெறி முதற்றே அரசின் கொற்றம் (புற., பா. 55)**

என்ற புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றது.

நீதியை வேண்டுபவர்களுக்கு, அக்கணமே துன்பம் நீங்குமாறு மன்னர்கள் நீதியை நிலை நாட்டினர். மக்களுக்கு நீதி கிடைக்க அவயங்கள் ஏற்படுத்தப்பட்டன. குற்றம் செய்தவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டனர். அறங்கூறும் மன்றங்கள் இருந்ததைப் பின்வரும் பாடல் செய்கின்றது. மன்னர்கள் அறவழியில் முறை செய்வதற்கு அடையாளமாக தங்கள் கையில் செங்கோல் தாங்கி இருந்தனர். அத்தகைய செங்கோல், அறம் என்னும் சொல்லை அடையாளமாகப் பெற்று வந்துள்ளது. மன்னன் கையில் உள்ள செங்கோல் நடுநிலைமை தவறாது, உலகம் புகழும்படி விளங்கியுள்ளன. முரசானது


ISBN Number: 978-93-91115-26-5

மக்களின் பாதுகாப்புக்குரிய அரணாக இருந்ததுள்ளது. வேந்தனது செம்மையால் மாரி சுரக்க, வெண்கொற்றக் குடை அறநிழலாக அமைந்திருந்துள்ளமை புலனாகிறது. மன்னராட்சி மாறி மக்களாட்சி ஏற்பட்டாலும், சங்க மன்னர்களிடம் காணப்படுகின்ற இத்தகைய உயரிய அறங்கள் ஒவ்வொரு ஆட்சியாளரிடமும் ஏற்பட்டலாயின், மக்களும் நாடும் என்றென்றும் செழிப்புற்று விளங்கும் என்பதை அறிய முடிகிறது.

**அரசியல் அறம்**

முடியாட்சி நிலவி வந்த சங்ககாலத்தில், நாட்டின் அனைத்து அதிகாரங்களும் மன்னனிடத்தில் குவிந்திருந்தன. இவ்வுலகம் செம்மை நெறியில் நிற்பதற்கும், உலக மக்களுக்கு உணவும் உடையும் உறைவிடமும் முறையாக கிடைப்பதற்கும், மன்னனே முதற்பொருளாக இருந்துள்ளான்.

> **நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே**
> **மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் (புற., பா. 186)**

என்ற பாடல், மக்களின் உடலில் உயிர் தங்குவதற்கு உணவும் நீரும் தேவை எனில், அந்த உயிருக்கும் உயிராய் இருந்து காத்து வருபவனாக மன்னன் இருந்துள்ளதை உணர்த்துகின்றது.

> **முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்களுக்கு**

 ISBN Number: 978-93-91115-26-5

**இறை என்றே வைக்கப்படும் (குறள் - 338)**

என்று தனது குறளில், முறையாக ஆட்சி செய்யும் மன்னரை, இறை என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

நாட்டில் இயற்கை நிகழ்வுகளோ அல்லது செயற்கை நிகழ்வுகளோ நிகழ்ந்தால், அனைத்திற்கும் அரசன்தான் காரணம் என்ற நம்பிக்கை சங்க காலத்தில் இருந்தது. சங்ககால மன்னர்கள், புலி தன் குட்டிகளைக் காப்பது போல, தன் மக்களை அறம்தவறாது காத்துள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது.

**சான்றோர் அறம்**

தமிழ்ப் புலவர்களின் பாடல்களில், மக்கள் மீதான பரிவும், அரசனைத் திட்டமிட்டுச் செயல்பட வலியுறுத்தும் அக்கறையும் முதன்மை பெறுகின்றன.

**வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு**
**பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்**
**யானை புக்க புலம்போலத்,**
**தானும் உண்ணான், உலகமும் கெடுமே**

**(புற., பா. 184)**

என்ற பாடலில் பிசிராந்தையார் பாண்டிய மன்னனுக்குப் பின்வருமாறு அறிவுரை கூறுகிறார்: காய்நெல் அறுத்துக் கவளமாய் யானைக்கு ஊட்டுவதுபோல் அரசன் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். மக்கள் மீது பரிவு காட்டவேண்டும். வரம்புக்கு உட்பட்டு வரிவாங்க

 ISBN Number: 978-93-91115-26-5

வேண்டும். அறிவார்ந்த கருத்தாளரையே அருகில் வைத்துக் கொள்ள வேண்டும். தரமற்ற ஆரவாரக் கூட்டத்தை அணுகவிடக் கூடாது. திட்டமிட்டுச் செயல்பட்டால் கோடி ஆக்கச் செயல்களை மேற்கொள்ளலாம். நாடும் உயர்வடையும்.

தமிழ்ப் புலவர்கள் தங்களது பிழைப்பிற்காகவென மட்டும் பாடல்கள் பாடாமல், எப்பொழுதெல்லாம் ஒரு அரசன் அறம் தவறுகின்றான் என்று தெரிகிறதோ, அப்பொழுதெல்லாம் தங்களது புலமையால் அவர்களை வழிநடத்தும் சான்றோர்களகாவும் விளங்கியுள்ளனர். மன்னர்களை அறம் திறம்பாமல் இட்டுச் செல்பவர்களாக அன்றைய புலமைச் சான்றோர்கள் விளங்கியுள்ளார்கள் என்பது புலனாகின்றது.

**போர் அறம்**

இனக்குழு வேட்டையில் கவனம் செலுத்தியவன், உணவுக்கான பெரும் போராட்டத்தை சந்திக்க வேண்டியிருந்தது. அதன் பின்னர் தனிநபருக்குரிய சொத்தாய் மாற்றம் பெற்ற காலம்தான் போரட்டத்தின் விளைவுகளை எல்லையில்லாது தோற்றுவித்தது. தமிழர்கள் போர் மேற்கொள்ளினும், அவற்றையும் அறவழியிலேயே நிகழ்த்தினர். போர்க்களத்தில் பகைவரோடு பொருந்தும் போதும் அறநெறிகளைப் பின்பற்றியுள்ளனர். சங்கத் தமிழகத்தில் நிகழ்ந்த


ISBN Number: 978-93-91115-26-5

போர்களை, பகையில் வெம்போர் என்றும், அறத்தின் மண்டிய மறப்போர் என்றும் போற்றியுள்ளனர்.

போர் தொடங்குவதற்கு முன்னால் போர் செய்யப் போவதை வெளிப்படையாக முரசறைந்து, பகைவருக்குத் தெரிவித்தல் மரபாக இருந்துள்ளதை, **அறத்தாறு நுவலும் பூட்கை (புற., பா.9)** என்னும் அடி வழி உணர முடிகின்றது. அக்காலத்து அரசர்கள் பெரும்பாலும் தன் வினைகளில் எல்லாம் அறத்தைக் கடைபிடித்தனர். போர்க்களத்தில் வீரர் விழுப்புண்பட்டோர், பொருவதன்றிப் பிறர் எதிர்த்தவழி அவரோடு போர் செய்தல் சிறப்பற்றது என எண்ணிப் புறக்கணித்தனர். ஒத்தவரோடு பொருதலே போர் அறம் எனக் கருதினர். ஒத்த வலியுடையாரோடு, போர் புரியும்போது உடல் ஆற்றலும் உள்ள உறுதியும் சமமாக பேசப்படுகின்றது. வன்மையானவர் மென்மையானவர்களைத் தாக்காமல், நிகரான வன்மையானவர்களோடு மோதுதலால் மெல்லியர் காக்கப்படுகின்றனர் என்பதும் புலப்படுகிறது.

போருக்குரிய பருவங்களாக, கூதிர் பருவமும் வேனிற் பருவமும் கொள்ளப்பட்டன. இவ்விருவகை பருவங்களிலும் மன்னர்கள் பாசறை அமைத்துத் தங்கி இருந்து போரிட்டனர். இதனை,

**கூதிர் வேனில் என்றிரு பாசறைக்கு**
**காதலின் ஒன்றிக் கண்ணிய வகையினும் (புற., 13)**

 **ISBN Number: 978-93-91115-26-5**

என்ற வரிகள் உணர்த்துகின்றன. மன்னர்களுக்கு இடையேயான போரினால், நாட்டில் பஞ்சமோ, மக்கள் செய்யும் தொழிலுக்கு இடையூறோ உண்டாகக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்துள்ளனர். அதற்காகவே உழவுத் தொழில் செய்வோர், அறுவடை முடித்து ஓய்வாக இருந்த கூதிர்பருவம் முதல் வேனிற்காலம் வரையுள்ள இடைக்காலத்தை போர் புரிவதற்கு ஏற்ற காலமாக தேர்ந்தெடுத்துள்ளனர் என்பது புலப்படுகின்றது.

பழந்தமிழ்நாட்டில் குடிகளின் நன்மை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, மன்னர்கள் குறைவின்றி வாழ்ந்து வந்தனர். அவர்கள் பிற நாடுகளைப் பிடித்து ஆள வேண்டும் என்ற ஆசையில் ஆட்சி செய்தவர்களல்ல. தன் படைவலிமைகளைப் பிற மன்னர்கள் பார்க்க வேண்டும் என்ற ஆவல் கொண்டோர் அல்ல. தன் குடிகளைப் பற்றியும், தன் நாட்டைப் பற்றியும் இகழ்ந்து பேசியவர்கள் இல்லாது போகவேண்டும் என்ற எண்ணத்தினால் போர் செய்துள்ளார்கள் என்பது புலப்படுகிறது.

மக்கள் சமூகம் காலம் காலமாக போர்களை எதிர்கொண்டு வருகின்றன. போர் முறைகளும் விதிகளும்தான் காலத்துக்கு காலம் மாறிக்கொண்டே வருகின்றன தவிர போர்கள் முற்றுப்பெறவில்லை.

 ISBN Number: 978-93-91115-26-5

வாளையும் ஈட்டியையும் கொண்டு போரிட்டது ஒருவிதம் என்றால், துப்பாக்கியையும் பீரங்கியையும் வைத்துப் போரிடுவது தற்காலமாக உள்ளது. எக்காலமாயினும் இயன்ற அளவு போர்களைத் தவிர்ப்பதே நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மையளிக்கும்.

**மறத்தில் அறம்**

சங்ககால மக்களுக்குக் காதலும் வீரமும் இரு கண்களாகத் திகழ்ந்தன. ஒருவனின் வீரத்தைக் கொண்டே அவனுக்கு சிறப்பும் இழிவும் ஏற்பட்டன. வீரத்தை தம் உயிர் மூச்சாகக் கருதியபோதிலும், அதிலும் அறத்தைக் கடைபிடித்தனர். பசுக்களைக் கொல்லக் கூடாது, பசு போன்ற பார்ப்பனரைக் கொல்லக் கூடாது, புதல்வரைப் பெறாதவர்களைக் கொல்லக் கூடாது போன்ற விதிகளைக் கடைபிடித்துள்ளனர்.

**ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்,**
**பெண்டிரும் பிணியுடையீரும், பேணித்**
**தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர் பெறாஅதீரும்,**
**எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின் என**
**அறத்தாறு நுவலும் பூட்கை (புற., பா. 9)**

என்று பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடிய புறநானூறு பாடல் மூலம், அக்காலப் போர்களில் எவ்வாறு அறப்போர் என்ற கருத்து


ISBN Number: 978-93-91115-26-5

செயல் வடிவம் பெற்றது, எவரையெல்லாம் கொல்லக்கூடாது என்று கருதினார்கள் என்னும் விளக்கம் தென்படுகிறது. ஆவினம் அவ்வினம் போன்ற இயல்புடைய, அந்தணர், பெண்கள் நோய்வாய்ப்பட்டோர், பிள்ளைபேரு அற்றோர் இவர்களை போர் தொடங்குவதற்கு முன்பு பாதுகாப்பான இடத்திற்கு போய்ச்சேருமாறு கூறுவதன் மூலம் மன்னர்கள் மறத்திலும் அறம் கடைப்பிடித்துள்ளார்கள் என்பதை உணர முடிகின்றது.

**பொருளீட்டலில் அறம்**

வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது. அறம் இன்பம் இரண்டிற்கும் பொருளே காரணமாகிறது. புகழ், இன்பம், கொடை எனும் மூன்றையும் ஒருங்கே பெற பொருள் தேவை. அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருள் பாகுபாடோடு வாழ்ந்த தமிழர்கள், அறத்தின் வழியிலே நின்று பொருளையும் இன்பத்தையும் ஈட்டினர். அறவழியில் இயற்றும் பொருளே சிறப்பினைத் தரும் என்று எண்ணினர். தீங்கு செய்யாமல், நேர்மையான அற வழியில் பெற்ற செல்வமே, ஒருவனுக்கு இன்பத்தையும் சிறப்பையும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

**நீர் பேணுமறம்**

உலகில் தோன்றிய அனைத்து உயிர்கட்கும் அடிப்படையான தேவைகளுள் ஒன்று நீர். விண்ணில்

 ISBN Number: 978-93-91115-26-5

உள்ள கோள்களுள் பூமியில் மட்டுமே நீர் நிறைந்ததாலே பூமியில் உயிர்கள் வாழமுடிகின்றது. நீர்வளம் இல்லை என்றால் நாடுகளும் இல்லை மக்களும் இல்லை.

சங்க காலத்தில் நீரறம் பேணுதல், மக்களாலும் மன்னர்களாலும் போற்றப்பட்ட ஒரு பேரறமாக இருந்துள்ளது.

**நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவு எனப்படுவது நிலத்தொடு ணீரே**
**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசினோரெ (புற., பா.35)**

என்ற புறநானூற்றுப் பாடல், உயிர்களுக்கு உணவு வேண்டும். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோர். உணவு என்பது நிலத்தொடு கூடிய நீரின் ஆக்கம். எனவே, நிலம் குழியான பகுதிகளில் நீர்நிலைகளை உருவாக்க வேண்டும்; பாசன வசதியைப் பெருக்க வேண்டும். இதற்கு முயல்பவரே முயற்சியாளர் என்று குறிப்பிடுகிறது. மனிதனின் அவசியத் தேவைகளுள் ஒன்றான நீர், பூமியில் மொத்தம் மூன்று சதவீதம் மட்டுமே உள்ளது. அவற்றை நாம் சிக்கனமாக சேமித்துக் காத்தலே, இப்புவியில் பல்லாயிரம் ஆண்டுகள் உயிர்கள் வாழ வழிவகுக்கும் என்ற சிந்தனையுடனே சங்கத் தமிழர்கள்,

 ISBN Number: 978-93-91115-26-5

நீரினைக் காப்பதை அறமாகக் கருதி இருந்துள்ளமை புலப்படுகிறது. இந்த அறச்சிந்தனை, இன்றைய மனித சமூகத்திற்கும் ஏற்படுமாயின், நீர்த்தடுப்பாடின்றி வருங்காலச் சமூகம் வளமாய் வாழ்வார்கள்.

**உழவு காத்தலறம்**

உழுதொழிலை மேம்படுத்திக் குடிநலம் காத்தல், ஓர் அரசின் தலையாய அறமாக இருந்தது. புறநானூற்றின் 35-ஆவது பாடலில் புலவர் வெள்ளைக்குடி நாகனார் இதனைத் தெளிவுபடுத்துகிறார்.

**நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது**
**பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்**
**குடிபுறம் தருகுவை யாயின், நின்**
**அடிப்புறம் தருகுவர், அடங்கா தாரே (புற., பா. 35)**

பகைவர்களை வென்று மன்னர்கள் பெறுகின்ற வெற்றி என்பது, ஏரினால் நிலத்தில் ஊன்றி, விளைந்த நெல்லின் பயனாகும். எனவே, அரசே, எருதுகளின் துணையுடன் பயிர்த்தொழில் புரிந்து, மக்களைக் காக்கும் உழவர் குடிக்கு நீ உதவுவாய் எனில், அடங்க மறுக்கும் பகைவரும் அடங்கி வருவர் என்று குறிப்பிடுகின்கிறார். **உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்** (சுதந்திரப் பள்ளு.4) என்று பாரதியாரும் உழவுத் தொழிலின் சிறப்பினை குறிப்பிடுகிறார். உழவும் உழவரும் இன்றியாயின், மனிதர்களுக்கு உணவு இல்லை

 ISBN Number: 978-93-91115-26-5

என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மனிதன் எவ்வளவு சம்பாதித்தாலும் பணத்தையோ, சொத்தையோ உணவாய் உட்கொள்ள முடியாது. எனவே, தனக்கென என்று இல்லாமல், ஒவ்வொரு மனிதரும் விவசாயத்தைக் காப்பதற்குத் தங்களால் இயன்றதைச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

**பொதுமை அறம்**

தான் தான் என்று சுயநலமாக இல்லாமல், தன்னைப் போலவே பிறரையும் கருதி, அனைவரையும் ஒன்றாக நினைப்பதே பொதுமை அறம் எனலாம்.

**அன்ன மாட்சி அனைய ராகித்,**
**தமக்கென முயலா நோன்தாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே**

**(புற., பா. 182)**

என்ற புறநானூற்றுப் பாடலில், அமிழ்தமே கிடைத்தாலும் தாமே தனித்து உண்ணாதவர், சினம் கொள்ளாதவர், செயலைத் துறந்து உறங்காதவர், அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுபவர், புகழ்தரும் செயலுக்கு உயிரையும் கொடுப்பவர், உலகமே கிடைத்தாலும் பழிச்செயலை நாடாதவர், சோம்பலை உதறியவர், தமக்கென உழைக்காமல் மக்கள் யாவருக்குமாக உழைப்பவர் முதலானவர்கள் உள்ளதால்தான் உலகம் உயிர்வாழ்ந்து


ISBN Number: 978-93-91115-26-5

கொண்டிருக்கிறது என்று பாண்டிய மன்னன் தன்னலமற்ற பொதுநல வாழ்வை மெச்சுகிறான்.

சமூக நலத்தையே முதன்மைப்படுத்துகின்ற அறநோக்கு அந்நாளைய தமிழர் பண்பாக இருந்திருக்கிறது என்பது இப்பாடல்வழி புலனாகின்றது.

**யாதும் ஊரே; யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா**
**நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன**

**(புற., பா. 192)**

என்ற புறநானூற்றுப் பாடல், உலகம் ஒன்று, மனிதகுலம் ஒரே குலம் என்ற சிந்தனையை முன்வைக்கின்றன. இச்சிந்தனை தமிழர் அறநோக்கின் உச்சம் எனலாம். சங்க மக்களிடம் காணப்பட்ட இப்பொதுமையறம், உலகம் போற்றும் உயர் எண்ணச் செல்வமாக அமைகிறது. இந்த அறநோக்கு கூடிய மனவளம் மனிதர் அனைவருக்கும் ஏற்பட்டுவிட்டால், உலகில் போரும் பூசலும் இருக்காது. பரிவும், நேயமும், நலன்களும் செழிப்புற்று ஓங்கும்.

**முடிவுரை**

சங்ககால மக்கள் தங்களது அகவாழ்க்கை மற்றும் புறவாழ்க்கை என அனைத்திலும் அறத்தை, தம்உயிராகக் கருதி வாழ்ந்துள்ளார்கள். அக வாழ்க்கையில், களவு, கற்பு, விருந்தோம்பல், ஈதல் ஆகியவற்றில் அறம் தவறாது வாழ்ந்துள்ளார்கள். புறவாழ்க்கையில், கொடை, வீரம்,

 ISBN Number: 978-93-91115-26-5

அரசியல், ஆட்சி, பொருளீட்டல், நீர்வளம் பேணுதல், உழவு காத்தல் ஆகிய அனைத்து செயல்களிலும் அறநெறியினைக் கடைபிடித்துள்ளார்கள். பண்டைத் தமிழர்கள், அறம், பொருள், இன்பம் எனும் முப்பொருள் பாகுபாட்டில், அறவழியிலேயே பொருள் மற்றும் இன்பம் என்னும் இரண்டனையும் பெறவேண்டும் என்ற உயரிய கொள்கையுடைவர்களாய் வாழ்ந்துள்ளனர் என்பது இவ்வாய்வின் முடிவாக அமைகிறது.

**பார்வை நூல்கள்**


[1] கந்தையா, ந. சி. மறைமலையடிகள். இராகவையங்கார், ரா. புலியூர்க்கேசிகன். (உ.ஆ), *பத்துப்பாட்டு மூலமும் உரையும்.* ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை - 017.

[2] சதாசிவம் ஐயர், தி. (உ.ஆ). *ஐங்குறுநாறு மூலமும் உரையும்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

[3] சீனிவாசன், ரா. (உ.ஆ). *சிலப்பதிகாரம் - மூலமும் திறனாய்வும்.* அணியகம், சென்னை-600 030.

[4] தாசன், மு. *தொல்காப்பியக் களஞ்சியம் பொருளதிகாரம் – பகுதி 1.* அபிலா பதிப்பகம், குமரி.

[5] பரமசிவம், தொ. (தொ.ஆ). *பாரதிதாசன் பாடல்கள்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை - 098.

[6] பிரபாகரன், ரா. (உ_ஆ). *குறுந்தொகை மூலமும் எளிய உரையும்.* காவ்யா பதிப்பகம், சென்னை-24.

[7] புலியூர்கேசிகன் (உ.ஆ). *அகநானூறு மூலமும் உரையும்.* ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை -017.

[8] புலியூர்கேசிகன் (உ.ஆ). *நற்றிணை மூலமும் உரையும்.* ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை -017.

[9] புலியூர்கேசிகன் (உ.ஆ). புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை -14.

[10] மெய்யப்பன், ச. (ப.ஆ). *பாரதியார் கவிதைகள்.* தென்றல் நிலையம், சிதம்பரம் - 608 001.

[11] வரததராசனார், மு. *திருக்குறள் தெளிவுரை.* திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், சென்னை – 600 018.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ *கீழ்* பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-93-91115-26-5

# Human Virtues in *Purananooru*

**Dr. N. Kumari,** Assistant Professor of Tamil, Auxilium College, Vellore, Tamilnadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-7889-6164**
**DOI: 10.5281/zenodo.8149813**

## Abstract

*Tamil Literature is created with the four virtues; Aram (virtue), Porul (material wealth), Inbam (pleasure), and Viduperu (Attainment) as objectives. 'Virtue' is the essence of man. The purpose of writing literature is human welfare. Although Tamil literature has been created in various forms since its inception, humanism prevails in them. Ancient Tamil sages did not extol virtue as a principle or doctrine. They extolled virtue as a way of life lived. In fact, how to build such a virtuous life has been elaborated in "Purananooru" which is known as one of the best works of Sangam literature. They are a source of our Tamil civilization. The purpose of this article is to study human virtues in "Purananooru".*

**Keywords:** Human, Virtues, *Purananooru.*

.

## References

[1] Balasuppiramaṇiyaṉ, Ku. Vē., *Puṟanāṉūṟu Mūlamum Uraiyum.* New Century Book House, Cheṉṉai, 2004.
[2] Parimēḻalakar, (urai). *Tirukkuṟaḷ.* Paḻaṉiyappā Bruthers, Cheṉṉai-14, Patippu-2010.


ISBN Number: 978-93-91115-26-5

[3] *Tirunāvukkaracu.* Kā. *Vāl̲um Ilakkiyamum*. Pārinilaiyam, Chen̲n̲ai,1982.

[4] Shaṇmugam Piḷḷai. Mu. *Saṅga Tamil̲ar Vāl̲viyal*. Ulakat Tamil̲ Arāycci Nir̲uvan̲am, Chen̲n̲ai. 2000

[5] Tamil̲aṇṇal. *Saṅgha Marapu*. Sintāmaṇi Patippakam, Mīn̲āṭci Puttaka Nilaiyam, Madurai. 2009.

[6] Balasubramanian, K. V. Purananuru Source and Text, New Century Book House, Chennai, 2004.



**Author Contribution Statement:** NIL.

**Author Acknowledgement:** NIL.


**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.



ISBN Number: 978-93-91115-26-5

# புறநானூற்றில் மானுட அறங்கள்

**முனைவர் நா. குமாரி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அக்சிலியம் கல்லூரி, வேலூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-7889-6164**
**DOI: 10.5281/zenodo.8149813**

## ஆய்வுச்சுருக்கம்

*அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் உறுதி பொருளாகக் கொண்டு படைக்கப்படுபவையே இலக்கியங்கள். 'அறம்' என்பதிலேயே மனிதம் இடம்பெற்றுள்ளது. இலக்கியங்களின் நோக்கமே மானுட நலம் தான். தமிழ் இலக்கியங்கள் தோன்றுத்தொட்டு பல்வேறு வடிவங்களில் படைக்கப்பட்டாலும் இவற்றில் மனித நேயமே மேலோங்கி காணப்படுகிறது. பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் அறத்தை கொள்கையாகவோ, கோட்பாடாகவோ போற்றவில்லை. அறத்தை வாழ்க்கை நெறியாகவே போற்றினார்கள்; வாழ்ந்தார்கள். அத்தகைய அற வாழ்வை எவ்வாறு அமைத்துக் கொள்வது என்பதனை நமது சங்க இலக்கியப் பேழை என்று அழைக்கப்படும் புறநானூறு செம்மையுறச் செய்துள்ளது. அவை நமது தமிழ் நாகரீகத்திற்கு ஒரு*

 ISBN Number: 978-93-91115-26-5

*மூலாதாரம்; அவற்றைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**கலைச்சொற்கள்:** வழக்கம், ஈகை, அறம், அல்லல், விழுப்புண்.

**முன்னுரை**

தமிழர் வாழ்வின் வரலாறு வீரத்திறன் விளக்கும் இலக்கியம் ஈகையும் கொடையும் இரு கண்ணென வாழ்ந்த ஈர மணமுடைய தமிழர்களின் இறவாப் புகழ் பேசும் எழுத்து ஓவியம் ; எண்ணக் காவியம் புறநானூறு. போரும் வீரமும் மட்டுமல்ல. புறநானூற்றுச் செய்திகள் ஈகையும் கொடையும் அதன் இதய நாதங்கள் ஆகும்.தமிழர் பெற்ற பெரும் பேரு புறநானூறு. இன்று தமிழர் இல்லங்களில் இலக்கிய மனம் வீசுகிறது மேலும் பாடி பரிசில் பெறப்போன புலவன் கூட குடு என்று மிடுக்கோடு கேட்டு பெற்றிருக்கிறான். கொடுத்தவனும் ஏதோ தானமாக தயவாக கொடுப்பதாக கருதாமல் வாரி வாரி வழங்கி இருக்கிறான். ஒரு புலவனுக்கு யானைகளையே பரிசாகத் தந்திருக்கிறான் ஒரு வள்ளல். இது வல்லவா கொடை? இது வல்லவா பரிசு, இது வல்லவா ஈகை, இனிய புகழ்க்கொடை.? இதனால்தான் புறநானூறு தமிழின் புகழ் மகுடமாக இன்றும் புகழ் ஒளி வீசி வருகிறது. வெளிநாட்டார் வியந்து பாராட்டும் வீரக்

 **ISBN Number: 978-93-91115-26-5**

காவியமாக விளங்கி வருகிறது. மேலும் புறநானூற்றில் மனித அறம் மேலோங்கும் பாடல்கள் சிறந்து விளங்குகிறது.

**அறம் -விளக்கம்**

அறம் என்னும் சொல் முறையே வழக்கம், நீதி, கடமை, புண்ணியம், ஈகை, அறக்கடவுள், சமயம் என்ற பல்வேறு பொருள்களிலும் வழங்கப்பட்டு வருகிறது என்று கா. திருநாவுக்கரசு அவர்கள் அறம் என்பதற்கு பொருள் கூறுகின்றார்.எனவே மனிதன் அறவழிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்ததே தனி மனிதனுக்கும் மனித சமுதாயத்திற்கு நன்மையும் உயர்வும் தரும் என்பதை கருத்தில் கொண்டு வாழ்வது அவசியமான ஒன்றாகும். இவ்வுலகம் இன்றளவும் நிலையாக அமைவதற்கு காரணங்கள் எவை என்று கேட்போர்க்கு அறம் செய்வோரும் அறச் சிந்தனை உடையோருமே என்பதனை, கடலுள் மாய்ந்த இளம்பெரும் வழுதி,

**உண்டால் அம்ம இவ்வுலகம்; இந்திரர்**
**அமிழ்தம் இயைவது ஆயினும், இனிது எனத்**
**தமியர் உண்டலும் இலரே; முனிவு இலர்**
**துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சி**
**புகழெனின் உயிரும் கொடுக்குவர்;... தமக்குஎன**
**முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுர் உண்மை**
**யானே (புறம்., பா. 182)**


ISBN Number: 978-93-91115-26-5

என்கிறார். இதுவே மக்கள் பண்பை விளக்கும் பாட்டு, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் இப்பண்பை பின்பற்றி வந்தனர் என்பதில் ஐயமில்லை.

அமிர்தமே கிடைத்தால் ஆயினும் தாமே தனியே உண்பவர்கள் இல்லை. அறம் செய்து வாழும் தன்மையுடைய பெரியோர்கள் இவ்வுலகில் வாழ்வதால் தான் இவ்வுலகம் நிலைத்து உள்ளது என்று அறத்தின் சிறப்பைப் பற்றி இப்பாடல் தமிழ்நாட்டினருக்கு மட்டுமின்றி; தமிழர்க்கு மட்டுமின்றி; உலக மக்கள் அனைவருக்கும் எடுத்துரைப்பது போல் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**மறத்தில் மானுட அறம்**

தமிழர்கள் தாங்கள் மறக்குடியில் பிறந்தவராயினும் அறம் போற்ற மறந்ததில்லை என்ற கருத்தினை, நெட்டிமையார்,

**ஆவும் ஆனியற் பார்ப்பன. மாக்களும்,**
**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**
**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன் போல் புதல்வர் பெறாஅ தீரும்,**
**எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின் என**
**அறத்தாறு நுவலும் பூட்கை… (புறம்., பா. 21)**

என்ற பாடலில் பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியை பற்றி பாடுகிறார்.பசுக்கள், பார்ப்பனர்,


ISBN Number: 978-93-91115-26-5

பெண்கள், நோயுடையோர், ஆண் பிள்ளை பெறாதவர் என யாவரும் பாதுகாப்பான இடத்தை நோக்கி செல்லுங்கள். என் அம்புகள் விரைந்து வந்து உங்களை அழித்துவிடும் என்று கூறிப் போருக்கு முன்னே எச்சரிக்கும் அறச் செயல், வீரமறக்குடியில் பிறந்த போதிலும் போர் செய்வதில் கூட அறம் போற்றி வாழ்ந்தனர் என்பதனை இப்பாடல் வழி அறியலாம்.

**கோழையைத் தேடிப் போரிடாத போர் அறம்**

சோழன் கிள்ளிவளவன் கருவூரை முற்றுகையிட்ட போது, கருவூர் மன்னன் போருக்குப் பயந்து அரண்மனையில் பதுங்கிக் கிடந்தான். போருக்குப் பயந்த இத்தகைய கோழையோடு போரிடுவது கிள்ளிவளவன் பெருமைக்கு இழுக்காகும் என்பதை,

> **கடிமரம் தடியும் ஓசை தன் ஓர் நெடுமதில்**
> **வரைப்பின் கடிமனை இயம்ப... (புறம்., பா. 36)**

ஆலந்தூர்க் கிழார் பாடியது ஆகும்.

**குழந்தைகளைக் கொல்லாதே குலப்பழி கொள்ளாதே**

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் தன் பகைவன் மலையமான் மக்களை யானைக் காலின் கீழ்க்கிடத்திக் கொல்ல முயன்ற கொடுமையைத் தவிர்த்து, அக்குழந்தைகளை விடுவிக்க வேண்டிக் கோவூர்க்கிழார்,

> **நீயே புறாவின் அல்லல் அழாஅல் பிறவும்**
> **...களிறு கண்டு அழுஉம் அழாஅல் மறந்த**

 ISBN Number: 978-93-91115-26-5

**புன்தலைச் சிறா அர் மன்று... (புறம்., பா. 46)**

தும்மூர் போல் எண்ணி என்ற தொடர்க்கு ஏற்ற துன்பத்தையும் துடைக்கும் தூய அன்புள்ளம் கொண்ட சோழர் மரபிலே வந்தவன். இச்சிறுவர்களோ தங்களைக் கொல்ல வந்து நிற்கின்ற யானையைக் கண்டு கூட அஞ்சாமல் கைகொட்டிச் சிரிக்கும் சின்னஞ்சிறு குழந்தைகளைக் கொல்ல நீ நினைக்கலாமா? என்று குழந்தைகள் இறைவனுக்கு நிகரானவர் என்று கூறியுள்ளார் ஆசிரியர்.

**வீரத்தாய்**

**புலி சேர்ந்து போகிய கல்லளை போல**
**ஈன்ற வயிறோ இதுவே தோன்றுவன் மாதோ**
**போர்க்களத் தானே (புறம்., பா. 86)**

என்னுடைய சிறிய வீட்டின் வாசலில் வந்து தூணைப் பிடித்தபடி நின்று கொண்டு உன் மகன் எங்கே என்று வழிபோக்கன் கேட்க, அதற்கு வீரத்தாய் என் மகன் எங்கே போயிருக்கிறான் என்று எனக்கே தெரியாது. ஆனால் ஒன்று நிச்சயம். அந்த புலியிருந்த குகை அவனைப் பெற்ற என் வயிறு ஆகும். எனவே, அவன் புகழ் சிறக்கப் போர்க்களத்துக்குத் தான் போயிருப்பான் என்று பெண்பாற் புலவர் பாடிய பாடல் ஆகும்.

**இரப்பதிலும் இறப்பது மேல்**

விழுப்புண் படாது போரில் சாவது இழிவாகும்.


ISBN Number: 978-93-91115-26-5

ஏனென்றால், குழந்தை இறந்து பிறந்தாலும் குறைப்பிறவியாக இருந்தாலும் வாளால் அதை வெட்டியே விழுப்புண் உண்டாக்கிய பின் புதைப்பது மறக்குடி மரபு,

**வயிற்றுத்தீ தணியத்**

**தாம் இரந்து உண்ணும் அளவை ஈன்மரோ**

**இவ்வுலகத்தானே (புறம்., பா. 14)**

அப்படி இருக்க போரிட்டு விழுப்புண் பெறாது பகைவரின் காவல் கைதியாகி அவர் அளிக்கும் நீரினை உண்டு உயிர் வாழ நினைப்பது அறமன்று என்று மனம் புழங்கிச் செத்தான். கணைக்காலிரும்பொறை அவன் இறந்தும் புகழின் உச்சியில் வீற்றிருக்கிறான்.

**நெடுநாள் வாழ்வளித்த பெரியோன்**

உன்னால் மூப்பின்றி வாழ உதவும் நெல்லிக்கனியை தானே உன்னை விரும்பாதவன் அதியமான் நெடுமா ஏனென்றால் தான் வாழ்ந்தால் தான் தன் புகழ் தான் பரவும் அதனால் அவ்வையாருக்கு அளித்தால் தமிழ் வாழும் என்று கொடுத்தான் அதற்காக அதியமான் நெடுமாநஞ்சியை இறைவனைப் போல என்றென்றும் வாழ்க என்று வாழ்த்தும் வாழ்த்தியல் பாட்டாகும்.

**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**


ISBN Number: 978-93-91115-26-5

**ஆதல் நின்னகத்து அடக்கிச் சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே (புறம்., பா. 91)**

**புகழ்வது போல் இகழ்ந்த புலமை**

அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் நிகழ விழுந்த போரைத் தடுக்க தொண்டைமானிடம் தூது வந்தார் ஔவையார்.

**உண்டாயின் பதங்கொடுத்து இல்லாயின் உடன் உண்ணும் இல்லோர் ஒக்கல் தலைவன்**

**(புறம்., பா. 95)**

அவர்கள் இருவரும் பகைமை ஒழிய அதியமானைப் புகழ்வது போல தொண்டைமானிடம் உன்னுடைய படைக் கருவிகள் புத்தம் புதியதாய் போற்றிப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அதியனின் படை கருவிகளோ ஓயாது போரில் ஈடுபட்டு நுனி மழுங்கியும், கூர் முறிந்தும் கிடைக்கிறது என்று கூறி இருவருக்கும் இடையே நடக்கவிருந்த போரைத் தடுக்கும் மனிதநேயமிக்க பாடல் ஆகும்.

**காலத்தை வென்ற மானுட அறம்**

நம் நாட்டில் வாழ்ந்த புரவலர்கள் எக்காலத்திலும் எந்த நேரத்திலும் எல்லோருக்கும் வழங்கக் கூடிய சிறந்த அறத்தைப் போற்றி வாழ்ந்தார்கள் என்பதை ஔவையார்,

**ஒரு நாள் செல்லலம்; இரு நாள் செல்லலம் ;**
**பல நாள் பயின்று, பலரோடு செல்லினும்,**

 ISBN Number: 978-93-91115-26-5

**தலைநாள் போன்ற விழிப்பினன் மாதோ**
**அணிபூண் அணிந்த யானை இயல்தேர்**
**அதியமான்;**
**பரிசில் பெறாஉங் காலம் நீட்டினும்,**
**நீட்டாதாயினும், யானைதன்**
**கோட்டிடை வைத்த கவளம் போல**

**(புறம்., பா. 101)**

என்ற பாடல் மூலம் அதியமானஞ்சி புலவர்கள் மீது கொண்ட அன்பு அவர்களுக்கு பரிசில் அளித்து உடனே போகச் செய்யாமல், அதைத் தருவதில் சிறிது காலம் தாழ்த்தி தன் அவைக்களத்திலே இருக்கச் செய்த அவனுடைய அன்புள்ளம் எத்தகையது என்பதனைப் புறப்பாடல் கல்வெட்டு போல் பதிவு செய்தது நமக்கு அகச் சான்றாய் விளங்குகின்றது.

**உலக இயல்பும் மானுட அறமும்**

உறையூர் முதுகண்ணனார் என்ற புலவர் சோழன் நலங்கிள்ளியைப் போற்றும் இவர்,

**சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்**
**கூனும் குறளும் உளமும் செவிடும்**
**மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு**
**எண்பேர் எச்சம் என்றிவை எல்லாம்**
**பேதைமை அல்லது ஊதியம் இல்என**
**முன்னும் அறிந்தோர் கூறினர் (புறம்., பா. 28)**

 ISBN Number: 978-93-91115-26-5

என்ற பாடலில் கண்பார்வை இல்லாமை, உறுப்புக் குறைவுள்ள தசைப்பிண்டம், கூன் விழுந்த உடல், மிகக் குட்டையான உடலமைப்பு, வாய்ப்பேச்சுஇன்மை, காதுகேளாமை, விலங்கின் முகத்தோற்றம், அறிவில் தெளிவின்மை ஆகிய எட்டு வகையான குறைவுடையது மக்கட்பிறவி எனச் சான்றோர் கூறியுள்ளனர். அத்தகைய எவ்விதக் குறையும் இல்லாத அரசனே நீ அறத்தைப் போற்றி நடப்பவன். ஆகவே அறத்தை இடையறாது செய்க என்று இப்பாடலில் உலக இயல்பைக் கூறி அறத்தை வலியுறுத்துகிறார்.

**ஈகையும் மானுட அறமும்**

புறநானூற்றில் வீரமும் கொடையும் புலவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டன. வீரத்தைச் சிறப்பித்துரைக்கும் போது அதனுடன் ஈகைப் பண்பும் விரித்துரைக்கப்படுகின்றது. புகழுக்குரிய செயல்களில் கொடைப் பண்பே முதன்மையாகத் திகழ்கின்றது. அறங்களில் தலையாய அறமாக ஈகையினைப் புலவர்கள் குறிப்பிடுகின்றனர். தன்னிடம் உள்ள செல்வத்தைப் பிறர்க்குக் கொடுப்பதால் உண்டாகும் புகழே நிலைத்த பேற்றினைத் தரும் என்னும் கருத்தினை, உறையூர் முதுகண்ணன் சாத்தனார்,

**திங்கள் புத்தேன் திரிதரும் உலகத்து**
**வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும்**

 ISBN Number: 978-93-91115-26-5

**வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி**
**அருள் வல்லை ஆகுமதி (புறம்., பா. 27)**

என்ற பாடலில் சோழன் நலங்கிள்ளியை செல்வம் நிலையில்லாதது என்பதனை உணர்த்துவதோடு நிலை இல்லாத செல்வத்தால் பெரும் பயனை அடைவதற்கு முன்னர் அதனைக் கையில் உள்ள போதே பிறருக்கு கொடுத்து பெருமை தேடிக் கொள்வாய் என்றும் அரசின் பெருமை ஈகையும் கொடையுமே என்று வாழ்த்திப் பாடியுள்ளார்.

**கல்வி அறம்**

புலவர்கள் மன்னர்களால் விரும்பப்பட்டமைக்கு காரணம் அவர்களின் புலமையே ஆகும். இன்றும் செம்மொழித் தகுதியுடன் வீறு கொண்டு நிற்கும் சங்க இலக்கியங்கள் வாழ்ந்து கொண்டிருப்பது மனித அறங்களை உள்ளடக்கிய தன்மையினால் மட்டுமே என்று கூறலாம். மனிதனுக்குக் கல்வி அவசியம் என வலியுறுத்திய புறநானூறு இன்றைய காலகட்டத்திற்கும் ஏற்புடையதாய் உள்ளது.

**உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே**
**பிறப்போரன்னை உடன் வயிற்றுள்ளும் சிறப்பின்**
**பாலால் தாய் மனம் திரியும் அறிவுடையோன் வழி**
**அரசும் செல்லும் (புறம்., பா. 183)**

 ISBN Number: 978-93-91115-26-5

என்று வழி கூறியதோடு, கற்றவர்கள் எங்கு சென்றாலும் அது அவர் ஊரே, அவர் நாடே என்று மிகப்பெரிய எல்லைக்குப் புறநானூறு சாலை அமைக்கின்றது. அதுமட்டுமின்றி சாதியத்திற்குத் தடை ஏற்படுத்தும் வகையில் கல்வியறிவே சிறந்ததென்ற கருத்துக்களை ஆங்காங்கே கூறிப் புரட்சியை ஏற்படுத்தும் புறநானூறு போற்றுதற்குரிய தெனில் மிகையன்று.

**நட்பு அறம்**

கோப்பெரும்சோழனைப் பாண்டிய நாட்டுப் புலவர் பிசிராந்தையார் பார்க்காமலே, பழகாமலே மேன்மையான நட்பு கொண்டிருந்தனர் இதனை,

**புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்**
**நட்பாம் கிழமை தரும் (குறள் - 785)**

என்று மிகச் சரியாக குறித்தது திருக்குறள். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்துறக்க என் நண்பர் பிசிராந்தையாருக்கு என் அருகே இடம் ஒதுக்குங்கள் என்று கூறிய வார்த்தைகள் உண்மையாகிவிட தன் உயிர் நீக்க வந்த நட்புறவு மிக மேலானது இதையே,

**தன் பெயர் கிளக்குங் காளையென் பெயர்**
**பேதைச் சோழன் என்னும் சிறந்த**
**காதற் கிழமையு முடையன தன்றலை**
**இன்ன தோர் வருகுவ ஒழிக்கவற்... (புறம்., பா. 98)**

 ISBN Number: 978-93-91115-26-5

எனப் புலவர் பொத்தியார் பிசிராந்தையார் வர உள்ளத்தில் வியந்து,

**இணையதூர் காலை யீங்கு வருதல்**
**வருவனென்ற கோணது பெருமையும்**
**…வியத்தொறும் வியப்பிறந்தன்றே (புறம்., பா. 89)**

என்று பாடுகிறார்.

**உடுக்கை இழந்தவன் கைபோலே ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு (குறள் - 788)**

என்ற திருவள்ளுவரின் வாக்கு உண்மையாயிற்று. நட்புறவு கொண்டு நாம் வாழ்ந்தால் மனநிம்மதியோடு வாழ முடியும். சாதி, மத, இன, வேறுபாடின்றி உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற எண்ணமின்றி எப்போதும் உறுதுணையாய் நிற்கும் நட்பு பூண்டு நல்லதோர் வாழ்வு வாழ முயல்வோம்.

**முடிவுரை**

இயற்கையோடு வாழ்ந்த மனிதன் தன்னையும் தன்னைப் போன்ற பிற உயிர்களையும், அவ்வுயிர்களுக்கு ஏற்படும் துன்பத்தினை களைத்து நல்வழிப்படுத்துதலே மானுட அறம். மனிதன் மனிதனாக நன் மக்களைக் கொண்டு மானுட அறமிக்கவனாக சங்க இலக்கிய நூலான புறநானூற்றில் வாழ்ந்திருந்தனர் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

 ISBN Number: 978-93-91115-26-5

## துணை நூற்பட்டியல்


[1] பாலசுப்பிரமணியன், கு. வே. *புறநானூறு மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[2] பரிமேழலகர் (உரை). *திருக்குறள்.* பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14, பதிப்பு-2010.

[3] திருநாவுக்கரசு, கா. *வாழும் இலக்கியமும்.* பாரி நிலையம், சென்னை, 1982

[4] சண்முகம் பிள்ளை, மு. *சங்கத்தமிழர் வாழ்வியல்.* உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 2000.

[5] தமிழண்ணல். *சங்க மரபு.* சிந்தாமணி பதிப்பகம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2009.


**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-93-91115-26-5

# Virtue in the Vedic and Advaida Traditions

**Dr. V. Thamizhmozhi**, Associate Professor of Tamil, Krishnasamy College of Science, Arts and Management for Women, Cuddalore.
**ORCiD: https://orcid.org/0000-0002-4187-0120**
**DOI: 10.5281/zenodo.8149826**

## Abstract

*The word virtue has a very flexible meaning. 'Virtue' is the collection of ethics and principles developed by a man to become a master himself. Foucault claims virtue is a law for living an honest life. People of the Sangam era believed that by practising this virtue in life, one can attain the pleasure of this life and the home in the next. The duties of an individual, social bonds, family ties, customs, likes and dislikes are all built on the principle of virtue. The people of the Sangham period did not regard virtue as a principle, doctrine or religion, but as a way of life. Virtue was considered a collection of moral norms. The people of the Sangam period developed and spread customs, justice, duty, morality, kindness and generosity about virtue. It can be seen in the Tamil tradition. Yet each cultural tradition develops certain virtues of its own. As such, Vedic and Advaida virtues have a deep impact on Tamil life. Thus, this article seeks to examine the concepts of virtue in the Vedic and Advaida traditions.*

**Keywords:** Virtue, Vedic, Advaida, Traditions.

 ISBN Number: 978-93-91115-26-5

## References

[1] Ratha Krishnan. S. and Raghavan. V. S. V. (Mozhipeyarpu), *Indiyavin Ithaya Oli*. Ratha Pathippagam, Chennai, 1968.

[2] Krishnathathapat. Sri. *Hindhu Matham*. Kanthiya Ilakkiya Sangam, Madurai, Second Edition, 1989.

[3] Thirunavukkarasu. K. Tha. (Author), Varatharasanar. M., (Translator), *Thirukkural Neethi Ilakkiyam*. Madras University, Chennai, 1977.

[4] Parthasarathi Iyangar, (Uraiyasiriyar). *Bhagavad Geetha*. Poomagal Vilasa Achukkudam, Chennai, 1935.

[5] Veeramani. K., (Aarachi Urai). *Manuthruma Sathiram.* Thiravidar Kazhga Veliedu, Chennai, Second Edition 2005.

[6] *Vazhviyar Kalangiyam*, - Part II, Tamil University, Thanjavur, 1987.

**Author Contribution Statement:** NIL.

**Author Acknowledgement:** NIL.

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.


ISBN Number: 978-93-91115-26-5





# வைதீக மற்றும் அவைதீக மரபில் அறம்

**முனைவர் வி. தமிழ்மொழி**, இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, கிருஷ்ணசாமி மகளிர் அறிவியல், கலை மற்றும் மேலாண்மை கல்லூரி, கடலூர்.
**ORCiD: https://orcid.org/0000-0002-4187-0120**
**DOI: 10.5281/zenodo.8149826**

**ஆய்வுச் சுருக்கம்**

*அறம் என்ற சொல் மிகவும் நெகிழ்வு தன்மை மிக்க பொருளை உடையது. ஒரு மனிதன், தனக்குத் தானே தலைவனாகுவதற்கு (Self Mastery) உருவாக்கிய நெறிமுறைகள், கொள்கைகள் ஆகியவற்றின் தொகுப்பே 'அறம்' (Ethics) எனப்படுகிறது. நேர்மையான வாழ்க்கை வாழ்வதற்குரிய சட்டமாக அறம் விளங்குகிறது என்ற ஃபுக்கோவின் கூற்று பொருத்தமாக அமைகிறது. இவ்வறத்தை, வாழ்க்கையில் கடைப்பிடிப்பதன் மூலம் இம்மையின் இன்பமும் மறுமையில் வீடுபேறும் அடைய முடியும் என்று சங்ககால மக்கள் நம்பினார்கள். தனி மனிதனுடைய உரிமைகளும், கடமைகளும், சமூக பிணைப்பும், குடும்ப இணைப்பும், பழக்க வழக்கங்களும், விருப்பு வெறுப்பு என்னும் இயல்புகளுமாகிய அனைத்தும் அறத்தின் கோட்பாட்டினால் கட்டப் பட்டுள்ளன. அறம் என்பதைச் சங்க கால மக்கள் ஒரு*


ISBN Number: 978-93-91115-26-5

*கொள்கையாகவோ, கோட்பாடாகவோ, சமயமாகவோ, கருதாமல், வாழ்க்கை நெறியாகவே கருதிப் போற்றினார்கள். ஒழுக்க நெறிக்குரிய விதிமுறைகளின் தொகுப்பாகவே அறம் கருதப்பட்டது.சங்க கால மக்கள் கண்ட வாழ்க்கை நெறியாகிய அறம் பழக்க வழக்கங்களாலும், நீதியாலும், கடமை உணர்வாலும், ஒழுக்கத்தாலும், ஈகையாலும், கொடையாலும் வளர்ச்சியடைந்து பரந்துள்ளதை தமிழ் மரபில் காணலாம். ஆயினும் ஒவ்வொரு பண்பாட்டு மரபும் தன் தனித் தன்மைக்கேற்ப சில அறக்கூறுகளை வளர்த்தெடுக்கிறது. அவ்வகையில், வடமரபு என்பதற்குள் வைதீக நெறியின் சமஸ்கிருத மொழி சாத்திரங்களும், வைதீகத்துக்கு எதிர்நிலை எடுத்த பிராகிருத பாலிமொழி சாத்திரங்களும் அடங்கும். அவ்வகையில், வைதீக மற்றும் அவைதீக மரபில் அறம் குறித்தான கருத்துக்களை ஆராய இக்கட்டுரை முற்படுகிறது.*

**குறிப்புச் சொற்கள்:** வைதீகம், அவைதீகம், மரபு, அறம்.

**முன்னுரை**

உலகில் மாந்தர், சமுதாயமாக வாழத் தொடங்கிய காலந்தொட்டே அறங்கள் தொடங்கிவிட்டன. மனித வாழ்வின் எல்லாத் தளங்களிலும் நீக்கமற நிறைந்து நிற்பது அறமாகும். மனிதர் சமூகமாக வாழும் நிலையில்

 ISBN Number: 978-93-91115-26-5

அவர்களது ஒவ்வொரு அசைவையும் தீர்மானித்தது அறமே. மனிதர் தாம் எப்படிப்பட்டவர்களாக வாழ வேண்டும், எத்தகைய சமூகமாக தமது சமூகத்தைத் தட்டியெழுப்ப வேண்டும் எனத் தீர்மானிப்பதே அறம் சார்ந்த முடிவாகும். எனவே, மனித சமூக வாழ்வின் அடிப்படையாக விளங்கும் அறம் இனம், மொழி, சமயம் கடந்ததாகும். ஆயினும் ஒவ்வொரு பண்பாட்டு மரபும் தன் தனித் தன்மைக்கேற்ப சில அறக்கூறுகளை வளர்த்தெடுக்கிறது. வடமரபு என்பதற்குள் வைதீக நெறியின் சமஸ்கிருத மொழி சாத்திரங்களும், வைதீகத்துக்கு எதிர்நிலை எடுத்த பிராகிருத பாலிமொழி சாத்திரங்களும் அடங்கும். வைதீக மற்றும் அவைதீக மரபில் அறம் குறித்தான கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வைதீக மரபில் அறம்**

அறத்தைப் பற்றி விளக்க முயலும் போது உண்டாகும் இடர்ப்பாடுகளே, வடமரபில் வழங்கப்படுகின்ற தருமம் என்ற சொல்லின் பொருளை வரையறுத்துக் கூறுவதிலும் உண்டாகின்றன. என்றாலும், அதன் பொருளை நூலோர் தந்துள்ள விளக்கங்களிலிருந்து பின்வருமாறு கொள்ளலாம்.

> **தருமம் என்று வழங்கப்பெறும் சொல் மிகவும் சிக்கல் பொருந்திக் காணப்படும் சொல்லே. ஒரு**

 ISBN Number: 978-93-91115-26-5

**மனிதன், ஒரு சமுதாயத்தைச் சேர்ந்து வாழ்வதற்கும் அல்லது தனியே நின்று ஒரு தனித்த பிறவியாக இருக்கச் செய்வதற்கும், அத்தகைய மனிதனுடைய குணத்தை உருவாக்கி வைக்கும் எல்லா இலட்சியங்களுக்கும், நோக்கங்களுக்கும், செல்வாக்குகளுக்கும், நிறுவனங்களுக்கும் அப்பெயர் வழங்கப்பட்டுள்ளது நேர்மை பொருந்திய வாழ்க்கை வாழ்வதற்குரிய சட்டம் தான் அது. அதை வாழ்க்கையில் கடைப்பிடித்த விதத்து, இந்த உலகத்திலேயே இன்பம், பேரின்பம் அதாவது மோட்சம் ஆகிய இரண்டு நன்மைகளையும் பெறக்கூடும். அது ஒழுக்க இயல், மதம் ஆகிய இரண்டும் பிணைந்து காணப்படுவதாகும். தருமம் என்ற கோட்பாட்டின் காரணமாக, ஒரு இந்துவின் வாழ்க்கை மிகவும் தெளிவாக விளக்கப் பட்டும், கட்டுப்படுத்தப்பட்டும் நிற்கிறது.**

**(எஸ். இந்தியாவின் இதயவொளி, ப.45).**

என்று எஸ். இராதாகிருஷ்ணன் விளக்கியுள்ளார்

இதன்மூலம், ‘அறம்’ என்ற சொல்லிற்கு சான்றோர்கள் தந்துள்ள பொருளிலேயே ‘தருமம்’ என்ற சொல் வடமொழியாளர்களால் போற்றப்பட்டு வருவது புலனாகின்றது. ஆனால், காலந்தோறும் ‘தருமம்’ என்ற


**ISBN Number: 978-93-91115-26-5**

சொல்லின் பொருள், இடம் பொருள் ஏவல்கள் காரணமாகச் சுருங்கியும், விரிந்தும் வழங்கப் பெற்றுள்ளதை வடமொழியிலுள்ள தரும சாத்திரங்களும், இதிகாச புராணங்களும் எடுத்துரைத்துள்ளன. ‘ஒழுக்கம்’, ‘வழக்கம்’,‘தண்டம்’ என்று தருமம் மூன்று வகையாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. இவற்றைப் பற்றித் தனிப்பட்ட சாத்திரங்களும் நீதி நூல்களும் வடமொழியில் எழுதப்பெற்றுள்ளன.

**வடமொழியில் நீதி: சொல்லும் பொருளும்**

‘நீதி’ என்பது வடமொழிக்குரிய சொல்லாகும். இச்சொல் ‘நீ’ என்னும் வினைச் சொல்லடியாகத் தோன்றியது. ‘நீ’ என்னும் அவ்வேர்ச் சொல்லிற்கு,‘அழைத்துச் சொல்’ (Lead),‘கொண்டு செல்’ (convey), ‘நடத்து’ (conduct), ‘வழிகாட்டு’ (Guide), ‘ஆட்சிசெய்’ (Govern), ‘இயக்கு’ (Direct) என்னும் பல்வேறு பொருள்கள் வடமொழியில் வழங்கி வருகின்றன. இவ்வேர்ச் சொல்லடியாக அமையும் ‘நீதி’ என்னும் பெயர்ச்சொல் இயக்குதல், வழிகாட்டுதல், செயலாட்சி, நடத்தை, தகுதி, மரபொழுங்கு என்ற பல பொருள்களை உணர்த்துகிறது. மேலும், செயலின் நிகழ்நிலை, கொள்கைமுறை முன்னுணர்மதி, அரசியல் அறிவுத்திறன், அரசியல் சூழ்ச்சித்திறன் என்னும் வேறுபல


ISBN Number: 978-93-91115-26-5

பொருள்களையும் நீதி என்னும் சொல் குறிக்கிறது (க.த. திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம், ப. 16).

இதனால் 'நீதி' என்னும் சொல் வடமொழியில் முதன் முதலில் நடத்துதல், செலுத்துதல், இயக்குதல் என்ற பொருள்களில் கையாளப்பட்டிருக்க வேண்டும் என்றும், பின்னர் உண்டான கருத்து வளர்ச்சிக்கேற்ப அச்சொல்லின் பொருள் காலப்போக்கில் விரிந்தும், பரந்தும் வளர்ந்திருக்க வேண்டும் என்றும் தோன்றுகிறது. அவ்வாறு வளர்ச்சியுற்ற காலத்தில் 'நீதி' என்பது சிறப்பாக 'இராசநீதி'யைக் குறிக்கும் சொல்லாகக் கருதப்படலாயிற்று. தண்ட நீதியை உணர்த்தும் அர்த்த சாத்திரத்தின் சிறப்புப் பெயராக அது வடமொழியில் வழங்கப்பெற்றதெனலாம். இக்காரணத்தினால் **நீதி சாத்திரம் என்னும் சொல் 'அர்த்த சாத்திரத்தை'க் குறிக்கும் மரபு அம்மொழியில் நிலைத்து விட்டது (திருக்குறள் நீதி இலக்கியம், ப. 17).** என்பார் க.த.திருநாவுக்கரசு.

'நீதி'என்ற சொல் 'நடத்தை' அல்லது 'ஒழுக்கம்' என்ற பொருளைக் கி.பி.ஏழாம் நூற்றாண்டு அளவிலேயே வடமொழியில் குறிப்பிடத் தொடங்கியது என்பார்(க.த. திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம், ப. 306). வடமரபில் வேதகாலம் முதற்கொண்டு அறக்கருத்துக்கள் பல வடிவங்களில் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.


**ISBN Number: 978-93-91115-26-5**

அவற்றுள் பெருவழக்காக இருந்து வருவது ‘தரும சாத்திரங்கள்’ எனப்படும் சட்டவியல் நூல்களாகும். அறக்கருத்துக்களைச் சிறப்பாக எடுத்துக் கூறும் சிலவகைப் பாடல்கள் இருக்கு வேதத்தில் உள்ளன. ஐதரேய பிராமணத்தில் இதன் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறது. உபநிடதங்களிலும், மகாபாரதத்திலும் அறநெறிக் கருத்துக்களை விளக்கும் பழமொழிகளும் மூதுரைகளும் அதிகமாகக் கையாளப்பட்டுள்ளன. பகவத்கீதை முழுவதிலும் அறக்கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. ஆயினும் “அவற்றைத் ‘தத்துவ நூல்கள்’ என்று கூறலாமே ஒழிய, நீதி இலக்கியங்கள் என்று போற்றுவதற்கில்லை” என்பார் க.த.திருநாவுக்கரசு (திருக்குறள் நீதி இலக்கியம், ப. 307).

**வைதீக அறஇயல் மரபு**

வேதத்தையும் வேதக் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்ட மரபு ‘வைதீகம்’ எனப்பட்டது. இவ்வைதீக அற இயல் மரபு, மனிதனின் உறுதிப்பொருட்கள் நான்கு என்றும், அவை தர்மம் (அறம்), அர்த்தம் (பொருள்), காமியம் (இன்பம்), மோட்சம் (வீடு) என்றும் குறிப்பிட்டுள்ளது. வடமொழியாளர் இதனைச் ‘சதுர்வித புருஷார்த்தங்கள்’ என்பார். மனிதன் தன்னுடைய வாழ்வை முழுமையாக நோக்கி, தனக்கு ஏற்ற குறிக்கோள் இன்னது எனத் தேர்ந்து, அதற்கு இணைவதாகிய


ISBN Number: 978-93-91115-26-5

அறச்செயல்களை அமைத்துக் கொள்ளும் அறவியற் கோட்பாடு ஒன்று உருவாகிவிட்ட நிலையை இப்பாகுபாடுகள் உணர்த்துகின்றன. ஆயினும், காலப்போக்கில் இதைச் செய்க, இதைச் செய்யற்க எனத் தனித்தனிச் செயலறங்களை எடுத்துக்கூறும் நூல்கள் வைதீகமரபில் பெருகின. அறம்புரிவதில் பகுத்தறிவு வளர்ச்சியும், தற்சுதந்திரமும், செயல் திறமும் உண்டா என்பதே கேள்விக்குறியாக அமைந்து விட்டது எனலாம்.

மேலும், முன்வினைக் கொள்கை, இப்பிறவியில் ஒருவன் என்னென்ன செய்ய வேண்டும் என்பன எல்லாம் முன்னமேயே முடிவு செய்யப் பெற்றுவிட்டன என்றும் இம்மரபு கூறியது. இதனால், அறவியலில் முழுமையான ஆதிக்கம் செலுத்தும் வலிமையை இவ்வைதீக மரபு அடைந்ததெனலாம். இவ்வடிப்படையில் சமூகக் கட்டுப்பாடுகளுடன் இணைந்த விதிகள், அறக்கோட்பாடுகளாக வெளிப்படுத்தப் பெற்றன. இவ்வகையில் வருண அறச்செயல்கள், ஆசிரம அறச்செயல்கள், சாமானிய அறச்செயல்கள் என்ற மூவகை அறச்செயல்கள் வகுத்துக்காட்டி விளக்கும் நூல்கள் இவ்வைதீக மரபில் எழுந்தன. மேலும் வருணம், ஆசிரமம் என்ற வேறுபாடுகளைக் கடந்து அனைவருக்கும் தேவையான அடிப்படை அறங்கள் எனச் சில அறங்கள் விதிக்கப்பெற்றன. அவை அடக்கம், அன்பு, கொல்லாமை,

 ISBN Number: 978-93-91115-26-5

வாய்மை, பிறருக்குத் துன்பம் செய்யாமை முதலியன ஆகும்.

**வைதீக அறக்கொள்கைகள்**

வேதங்கள் கூறும் ‘ரித’ என்ற கருத்தில் வைதீக சமய அறக்கொள்கையின் தொடக்கத்தைக் காணலாம். ‘ரித’ என்ற சொல் இவ்வுலகத்தைப் பிணைத்திருக்கும் ஒழுங்கமைப்பைப் குறிப்பிடுகிறது. நற்பண்புகள் ‘ரித’த்தோடு இயைந்தவை என்றும் தீய செயல்கள் இதற்கு மாறானவை என்றும் கூறப்பட்டன. அதன் பின்னர், அறநெறிக் கருத்துக்கள் ‘தருமம்’ என்ற பெயரில் வழங்கப்பட்டன. சமயம், சட்டம், நேர்மை, கடமை,ஈகை, அறநெறி ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாக இத் ‘தருமம்’ என்ற சொல் விளங்கியது. மனித முயற்சியால் வாழ்வில் ஈட்ட வேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு குறிக்கோள்களுள் இதுவும் ஒன்றாகும். இதில் வீடுபேற்றை அடைவதற்கு அறம் கருவியாக விளங்குகிறது எனலாம். தருமம் இரண்டு வகைப்படும்.

**1. வருணாசிரம தருமம் அல்லது சுதர்மம்**

**2. சாதாரண தருமம் அல்லது பொது தர்மம் என்பனவாகும்**

**வருணாசிரம தருமம் அல்லது சுதர்மம்**

வருணாசிரம தருமம் வருணங்கள், ஆசிரமங்கள் ஆகியவற்றோடு சார்பற்ற அல்லது அவற்றின்

 ISBN Number: 978-93-91115-26-5

கட்டுப்பாட்டுக்குட்பட்டதாகும். ஒருவருடைய தொழில் அல்லது பிறப்பைப் பொறுத்து அவருடைய கடமைகள் அமைகின்றன. இதனை ‘விசேட தருமம்’ என்றும் கூறுவர்.

**வருண தருமம்**

மனிதன், சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை ‘வருண தருமம்’ என்று அழைத்தனர். மனிதனிடம் சத்துவம், ராஜசம், தாமசம் என்ற மூன்று குணங்கள் உண்டு என்றும், இதில் சத்துவம் மிகுந்தவன் பிராமணன் என்றும், ராஜசம் மிகுந்தவன் சத்திரியன் என்றும், ரஜோதாமசம் மிகுந்தவன் வைசியன் என்றும், இம்மூன்று குணங்களும் முதிராதவன் சூத்திரன் என்றும் மனுதரும சாத்திரம் குறிப்பிடுகிறது (மனுதரும சாஸ்திரம், பக். 343 – 345). இந்த குணங்கள் பிறப்பால் அமைகின்றன. இவற்றுக்கு ஏற்ற செயல்கள் தேவை என்பதால், குணத்தையும் செயலையும் வைத்து பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வருணங்கள் வகுக்கப்பட்டன. இதில், பிராமணன் அறிவை வளர்க்கவும், சத்திரியன் சமூகத்தைப் பாதுகாக்கவும், வைசியன் பொருள் தேடித்தரவும், சூத்திரன் உடல் உழைப்பை நல்கவும் விதிக்கப்பட்டனர். மேலும், இந்த நான்கு வருணங்களுக்குப் புறம்பாக வேறு வருணம் கிடையாது என்றும் தந்தையின் குணம்


ISBN Number: 978-93-91115-26-5

மக்களிடம் காணப்படும் என்பதால், மக்களுடைய வருணம் தந்தையின் வருணம் என்றும் மக்கள் அவர்களுடைய தந்தையின் தொழிலைச் செய்யக் கடமைப்பட்டவர்கள் என்றும் வருண தருமம் விதிவகுத்துள்ளது. ஒவ்வொரு வருணத்தாருக்கும் இருவகையான தருமங்கள் உள்ளன. ஒன்று, வருணத்துக்குரிய தொழில். இரண்டு, வருண பிறப்புக்கு ஏற்ற தருமம். பிராமணன் வருணத்துக்குரிய தொழிலை மறந்தாலும் மீண்டும் அதனைக் கற்றிடலாம். ஆனால் அவனது பிறப்புக்குரிய தருமங்களைத் தவறவிட்டால் அவன் தனது வருணத்தகுதியை இழந்துவிடுவான். இவ்வாறே ஒவ்வொரு வருணத்தார்க்கும் விதிக்கப்பட்டுள்ளது. வருண தருமம் பற்றிய அறிவியல் விளக்கத்தை முன்வைத்த கிருஷ்ணதத்தபட் என்பவர் **அறிவிலி ஆசிரியனாகவும், கோழை படை வீரனாகவும், மெய்ப்பொருளை நாடியவன் வாணிகத்தில் ஈடுபடுபவனாகவும் இருத்தல் சமுதாயத்திற்கு நல்ல தன்று என்ற உளவியல் உண்மை இதில் மேலோங்கி இருக்கிறது" என்று விளக்கியுள்ளார் (இந்து மதம், ப. 12).**

இதன்மூலம், வருண தருமம் என்பது பிறப்பால் வேறுபடுவதையும், பிறப்பால் அமைந்து குணங்களாலும் தொழில்களாலும் வரையறுக்கப்படுவதையும் அறியலாம்.

 ISBN Number: 978-93-91115-26-5

வருண தருமத்தில் சமத்துவநிலை இல்லை; ஏற்றத்தாழ்வு நிலையே காணப்படுகிறது.

**ஆசிரம தருமம்**

மனிதன், தன் வாழ்வின் வளர்ச்சி நிலைகளில் ஆற்ற வேண்டிய கடமைகள் 'ஆசிரம தருமம்' என்று கூறப்படுகிறது. இது, சுதர்மத்தின் மற்றொரு பிரிவாகும். இவ்வாசிரம தருமம் நால்வகைப் பருவங்களை உள்ளடக்கியதாகும். அவை பின்வருமாறு:

**1. பிரம்மசரியம் (மாணாக்க நிலை)**

**2. கிருஹஸ்தம் (இல்லற நிலை)**

**3. வானப்பிரஸ்தம் (காட்டில் உறைதல்)**

**4. சந்நியாசம் (துறவு நிலை)**

மாணவப் பருவத்தில், ஆசிரியருடன் குருகுலவாசம் செய்து, அடிபணிந்து கல்வி கற்று, ஒழுக்கம் பயின்று தேறுவது பிரம்மச்சரியமாகும். பின்பு, வீடு சென்று திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துவது கிருஹஸ்த நிலையாகும். இல்லறத்தில் உள்ளோர் பொருள் தேடி வேதியர், தெய்வம், பிதிரர், பிராணிகள், மனிதர் ஆகியோர்க்கு உதவி செய்யக் கடமைப்பட்டவர்களாவர். ஆதலால், இல்லறநிலை மற்ற மூன்று நிலைகட்கும் ஆதாரமாகக் கருதப்படுகிறது. பின்பு, தம் மக்கள் வளர்ந்ததும், இல்லாளுடன் காட்டிற்குச் சென்று தவ வாழ்க்கையை மேற்கொள்வது


ISBN Number: 978-93-91115-26-5





வானப்பிரஸ்தம் எனப்படும். அதன்பின், துறவிகளாகி யோகம் செய்து வீடுபெறுவது சந்நியாசநிலை எனப்படுகிறது. மேற்சொன்ன இந்நான்கு பருவத்திலும், ஒருவன் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றியதே ஆசிரம தருமம் ஆகும். நான்கு ஆசிரம தருமங்களில் இல்லறத்தைத் தவிர ஏனைய ஆசிரம தருமங்களில் பாலியல் உறவு விலக்கப்பட்டுள்ளது.

**சாதாரண தருமம் அல்லது பொது தருமம்**

எந்த வருணமாயினும், எந்த ஆசிரமத்தில் இருப்பினும், மனிதன் என்ற முறையில் எல்லோரும் செய்ய வேண்டிய அறச்செயல்களைச் 'சாதாரண தருமம்' (Absolute Duties) என்று கூறுவர். அன்பு, அருள்,ஈகை, தன்னடக்கம், கொல்லாமை, கள்ளாமை, வாய்மை முதலிய நற்பண்புகள் எல்லோருக்கும் பொதுவானவையாகும். மேற்கூறியவற்றிலிருந்து வருணாசிரம தருமம் மனிதனின் புறவொழுக்கத்தையும் (Objective Morality) சாதாரண தருமம் அவனது அகவொழுக்கத்தையும் (Subsective morality) செம்மைப்படுத்துகிறது என்பது பெறப்படுகிறது.

**வினைக் கோட்பாடு**

வைதீக சமயத்தின்படி ஒருவனிடம் தோன்றும் செயல் அறச்செயலாக இருக்க வேண்டுமெனில், அச்செயல் முழுமனத்துடன் விரும்பப்பட்டு அதன்

 ISBN Number: 978-93-91115-26-5

விளைவிற்குப் பொறுப்பும் ஏற்றுக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். மனிதன் தான் விரும்பிய செயலைத் தேர்ந்தெடுப்பதற்கும் செய்வதற்கும் உரிய சுதந்திரம் உடையவனா என்ற வினாவிற்கு வைதீக சமயம் ‘வினைக் கோட்பாட்டை’ விடையாகத் தருகிறது. ஒருவன், தன் விருப்பத்திற்கு மாறாகச் சில நேரங்களில் நடக்க வேண்டி இருப்பதற்குக் காரணம் அவன் முன்னர்ச் செய்த வினையே என்று அக்கோட்பாடு கூறுகிறது.

வினைக்கோட்பாட்டின்படி, ஒருவனது இன்றைய நிலைமை அவன் முன்பு செய்த வினைகளின் விளைவு எனவும், அதே போன்று அவன் இப்போது செய்யும் வினைகளே இனிமேல் அவன் அடையப்போகும் நிலையை முடிவு செய்யும் எனவும் மனிதன் தன் விருப்பம் போல் எதையும் செய்யச் சுதந்திரம் அற்றவன் எனவும் சுட்டுகிறது. ஒரு செயலைச் செய்வதற்குச் சுதந்திரம் இல்லையெனில் ஒருவன் செய்யும் செயலுக்கு அவன் பொறுப்பாளியாக மாட்டான் என்பது வைதீக சமயத்தின் வினைக் கோட்பாடாகும். ஆனால், பொறுப்புணர்வு என்பது அறச்செயலின் அடிப்படையாகக் கருதப்படுகிறது. வைதீக சமயம், வினை மனிதனுடைய முழுச் சுதந்திரத்தையும் பறித்துவிடுவதில்லை என்றும் மனிதன் வினையை வெல்ல முடியும் என்றும் விளக்கம் கூறுகின்றது. இவ்வினை, ஆகாமியம் வினை, சஞ்சிதம்

 ISBN Number: 978-93-91115-26-5

வினை, பிராரப்தம் வினை என மூன்று வகைப்படும். இதில் ‘ஆகாமியம்’ என்பது மனித ஈட்டிக் கொண்டிருக்கும் வினையைக் குறிக்கிறது. ‘பிராரப்தம்’ என்பது இப்பொழுது பயனளித்துக் கொண்டிருக்கும் பழவினையாகும். ‘சஞ்சிதம்’ என்பது நுகரப்படாமல் வைக்கப்பட்டிருக்கும் பழைய வினையாகும்.

இம்மூவகை வினைகளில் பிராரப்த வினைகளின் மீது மனிதனுக்கு எவ்வகைக் கட்டுப்பாடும் கிடையாது. பிராரப்த வினை அளிக்கும் பயனைத் துய்த்தே தீர்க்க வேண்டும். ஆகாமிய, சஞ்சித வினைகளைச் செய்வதில் மனிதன் முழுச் சுதந்திரம் உடையவன். அவற்றை மறுபடியும், பிறப்பையும் ஏனைய பயன்களையும் தரக்கூடிய பிராரப்தமாக மாற்றுவதோ அல்லது சஞ்சித அறச்செயல்களாகச் செய்து வீடுபேறு அளிக்க வல்லதாகச் செய்வதோ மனிதனின் சுதந்திரதிற்கு உட்பட்டதாகும். இதனை, ஓர் எடுத்துக்காட்டு மூலம் பின்வருமாறு விளக்கலாம்:

**ஒரு வேடன் பல அம்புகளுள்ள தனது அம்பறாத் தூணியிலிருந்து ஓர்**

**அம்பை எய்துவிட்டு மற்றோர் அம்பை எய்யக் கையில் எடுத்து வைத்துக்**

**கொண்டிருப்பதைக் கொண்டு இம்மூன்று வினைக் கொள்கைகளையும்**


ISBN Number: 978-93-91115-26-5

**விளக்குவதுண்டு. அம்பறாத் தூணிதான் சஞ்சிதம், எய்த அம்பு பிராரப்தம், எய்யப் போகும் அம்பு ஆகாமியம் ஆகும்.” (வாழ்வியற் களஞ்சியம், தொகுதி இரண்டு, ப. 51).**

இதில், சஞ்சிதமும் ஆகாமியமும் மனிதனுடைய வசத்திலுள்ளவை. பிராரப்த வினையை அவன் துய்த்தே தீர வேண்டும். ஆகாமியம் சஞ்சிதத்துடன் சேரும். சஞ்சிதத்தில் ஒரு பகுதி அடுத்த பிறப்பின் பிராரப்தமாகும். இவ்வாறு, வினைக் கோட்பாட்டிற்கு ஏற்ப பிறப்புக்கள் தோன்றி கொண்டே இருக்கும். எனவே, பொறுப்புணர்வுடன் கூடிய அறச்செயல்கள் வைதீக சமயத்திலும் உள்ளன என்று அறியலாம். வைதீக சமயம் செயல்களை அறச்செயல் (வெண்மை/சுக்கிலம்), மறச்செயல் (கருமை/கிருஷ்ணம்), அறமும் மறமுமான செயல் (வெண்மை கருமை/சுக்கில கிருஷ்ணம்), அறமும் மறமும் அல்லாத செயல் (வெண்மை கருமையல்லன/அசுக்கில கிருஷ்ணம்) என நான்கு வகைகளாகப் பாகுபடுத்தியுள்ளதை கலைக் களஞ்சியத்தின் மூலம் அறியலாம். இவற்றுள் முதல் மூன்றுவகைச் செயல்களும் எனது என்ற உணர்வுடனும், பயனைக் கருதியும் செய்யப்படுவனவாகும். இச்செயல்களே வினைகளுக்கு அடிப்படையாகும். நான்காம் வகையான அறமும் மறமுமல்லாத செயல் நான்,


ISBN Number: 978-93-91115-26-5

எனது என்ற உணர்வுகளின்றியும், பயனில் பற்றில்லாமலும் செய்யப்படுவதாகும். இச்செயலைச் செய்வதால் ஆகாமியவினை ஏற்படுவதில்லை.

வினைக்கோட்பாட்டின் படி, எந்தச் செயலும் உரிய பயனைத் தராமல் இராது என்றும், அதன்படி அறமும் மறமுமல்லாத செயல் அதற்குரிய பயனைத் தருமாயின் அப்பயனை இறைவனுக்கு விட்டுவிடுவதன் மூலம், சஞ்சித வினையை இல்லாமற் செய்யலாம் என்றும், அத்தகு செயல்களைச் செய்பவன் அவனுடைய பிராரப்த வினையின் பயனைத் துய்த்து முடித்தவுடன் வீடுபேறு பெறுவான் என்றும் வைதீக சமயம் குறிப்பிடுகிறது.இவற்றிலிருந்து, மனிதன் தான் செய்யும் வினைகளினால் கட்டுண்டாலும் அவற்றினின்றும் விடுபடுவதற்குரிய சுதந்திரமும் பொறுப்புமுடையவன் என்பது தெளிவாகிறது.

வைதீக வினைக் கோட்பாடு, சமண-பௌத்த வினைக்கோட்பாட்டின் வளர்ச்சிபெற்ற வீடு ஒன்றாகக் காணப்படுகிறது. வைதீக சமயம் அறம், பொருள், இன்பம் வீடு என நான்கு உறுதிப் பொருள்களைக் குறிக்கோள்களாக ஏற்றுள்ளது. பொருளும், இன்பமும் அறத்தை நாடவும், அறம் வீடு அளிக்கவும் பயன்படுகின்றன. இக்குறிக்கோள்களை நோக்கிச் செய்யும் செயல்களே அறக்கடமைகளாகும்.

 ISBN Number: 978-93-91115-26-5

**பற்றற்றுப் பணியாற்றல்**

வினைப் பயனிலிருந்து மீறுகிற வழியே நிட்காமிய கருமம் அல்லது பற்றற்றுப் பணியாற்றுகின்ற முறை என்று பகவத்கீதை குறிப்பிடுகின்றது (பகவத் கீதை, ப. 76). வீடுபேறு அடைவதற்குக் கருமம் தடையாக இருக்காமல் அதற்கு வழியாக அமைகிற வழியைச் சொல்வதினால் இது ‘கரும மார்க்கம்’ என்றும் கூறப்படும். இக்கொள்கை, உலகப்பற்றையும் வினைப்பயன்களையும் துறக்க வற்புறுத்துகிறது.

**பூர்வ மீமாம்சைக் கொள்கை**

வைதீக தத்துவங்கள் எல்லாம், தருமத்தை வலியுறுத்துகின்றன. என்றாலும், மீமாம்சைக் கொள்கையில் அது மிகச் சிறப்புடன் கையாளப் பட்டுள்ளது. வேதங்கள் கூறும் கருமங்கள், வேள்விகள் முதலியவற்றைத் தவறாது கடைப்பிடிப்பது தருமம் என்று கருதியதால் இது,‘கரும மிமாம்சை’ என்று கூறப்படும். ‘தருமம் கருமத்திற்காக’ (நியோக சித்தி) என்னும் குறிக்கோள் இதில் விளக்கப்பட்டுள்ளது. மேலும், முற்கால மீமாம்சையினர் இன்பம், பொருள், அறம் என்ற மூன்று குறிக்கோள்களோடு நிறுத்திவிட்டனர். இவர்கள் கருத்துப்படி, தருமத்திற்கு மேம்பட்டது வேறொன்றும் இல்லை என்பதாகும். ஆனால் பிற்கால மீமாம்சையினர் தருமத்தை வீடுபேற்றிற்கு வழியாகக் கருதினர் என்று


ISBN Number: 978-93-91115-26-5

குறிப்பிடுகிறார் கிருஷ்ணதத்தபட் (கிருஷ்ணதத்தபட், இந்து மதம், ப. 82). அறவொழுக்கம், உலகில் தொடர்புடையது (லௌகீகம்) எனவும் சமயச் சார்புடையது (சாத்திரீகம்) எனவும் இருவகைப்படும். இதில், சமயச் சார்புடைய கடமைகள் பின்வருமாறு இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**1. கட்டுப்பாட்டிற்குட்பட்டவை (காமியக் கருமங்கள்) (Conditional Duties) இவை பயன்கருதிச் செய்யப்படுபவை ஆகும்.**

**2. கட்டுப்பாடுகளற்றவை (நித்திய நைமித்திக கருமங்கள்) (Unconditional Duties). இவை, ஒவ்வொருவரும் நாள்தோறும் செய்ய வேண்டிய கடமைகளையும், சிறப்பான நாட்களில் தவறாமல் செய்ய வேண்டிய கடமைகளையும் குறிப்பிடுகிறது.**

இங்குக் கடமைகள், செயல்கள், கருமங்கள் என வைதீகம் வலியுறுத்துபவை பெரிதும் சமயச்சார்பான சடங்குகளாகவும், அனுட்டானங்களாகவும் இருக்கக் காணலாம். மேற்கூறியவற்றிலிருந்து, வீடுபேற்றை அளிக்கும் செயலே அறச்செயல் என்பது வைதீக சமயத்தின் முடிவாகப் பெறப்படுகிறது. இனி, வடமரபின் மற்றொரு பிரிவான அவைதீக மரபைக் காணலாம். இதனைச் சிரமண மரபென்றும் கூறுவர்.


ISBN Number: 978-93-91115-26-5

## அவைதீக அறவியல் மரபு

வேதத்தையும் வேதக் கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளாத மரபு 'அவைதீகம்' எனப்படுகிறது. இதனுள் ஆசீவகம், சாருவாகம் முதலான மார்க்கங்கள் அடங்கினாலும் சமண, பௌத்த அறங்களே தலையானவையாகக் கருதப்படுகின்றன.

## சமண அறக்கொள்கை

வினைகள் அற்ற சூனிய நிலையே அறுதி இலக்கு என்பது சமண சமய முடிவாகும். சமண அறநெறி 'இரத்தினத் திரயம்' எனப்படுகிறது. நன்னம்பிக்கை, நல்லறிவு, நல்லொழுக்கம் ஆகியன அம்மூன்று இரத்தினங்களாகும். சமணருள் இல்லறத்தாருக்குரிய அறவொழுக்கம் 'அணுவிரதம்' என்றும், துறவிகளுக்குரிய அறவொழுக்கம் 'மகாவிரதம்' என்றும் கூறுகிறது. இன்னா செய்யாமை (அகிம்சை), வாய்மை (சத்தியம்), கள்ளாமை (அசுதேயம்), சிற்றின்பம் விழையாமை (பிரம்மச்சரியம்), கவராமை (அபரிக்கிரகம்) முதலிய நற்பண்புகளை இல்லறத்தார் வரம்பிற்குட்பட்டும், துறவிகள் வரம்பின்றியும் கடைப்பிடிக்க வேண்டும் என்று சமணம் வலியுறுத்துகிறது. இது வேதத்தையும் வேள்விகளையும் எதிர்ப்பது; வருணாசிரம தருமத்திற்கு இதில் இடமில்லை எனலாம். 'எல்லா உயிர்களும் சமம்' என்ற கருத்தைக் கொண்டதால் இதை, மக்கட்

 ISBN Number: 978-93-91115-26-5

பண்புக்கொள்கை (Humanism) எனலாம். இதை அடிப்படையாகக் கொண்டதே இன்னா செய்யாமை ஆகும். சொல்லாலும், செயலாலும், மனத்தாலும் கூடத் தீங்கு செய்யக் கூடாது என்பது மிகக் கடுமையாக வற்புறுத்தப்படுகிறது. இன்ப துன்பங்களுக்கு நாமே பொறுப்பு; நம் கருமங்களை நம் முயற்சியினால் நாமே களைந்து விடுதலை பெற வேண்டும் என்பதும் அவ்வாறு அறவழியொழுகி மனத்தூய்மையுடையோர் அனைவரும் கடவுளர்களே என்பதும் சமண அறக்கொள்கையின் கருத்தாக வலியுறுத்தப்படுகிறது. சமண அறத்தில் வினைக்கொள்கையும், நிலையாமையும், துறவும் பெரிதும் வலியுறுத்தப்படுகின்றன.

**பௌத்த அறக்கொள்கை**

சமண சமயத்தைப போன்றே பௌத்தமும் முழுமுதற் பொருள் என்ற கடவுளற்ற 'அறச் சமயம்' (Non Theistic Ehical Religion) ஆகும். இதுவும், தேவங்களையும் வருணாசிரமத்தையும் மறுக்கிறது. இவ்வுலகம் துன்பம் நிறைந்தது என்றும், இதன் காரணத்தை அறிந்து அதனை அகற்றினால் துன்பத்திலிருந்து விடுதலை அடையலாம் என்றும் இக்கொள்கை குறிப்பிடுகிறது. இந்தப் பேருண்மை 'ஆரிய சத்தியம்' எனப்படுகிறது.


ISBN Number: 978-93-91115-26-5

துன்பத்தை நீக்கி, பற்றின்மை அடையச் செய்கிற நெறிமுறைகளை பௌத்தக் கொள்கை, எட்டு விதிகளாகப் பாகுபாடு செய்துள்ளது. அவை,

- **நல் அறிவு**
- **நன்நோக்கம்**
- **நல்வாக்கு**
- **நற்செயல்**
- **நல் ஒழுகலாறு**
- **நன் முயற்சி**
- **நன்மனம்**
- **நற்தியானம்**

என்பவையாகும். இந்த எட்டும் தவறின்றி, அற நேர்மையுடையதாக இருக்க வேண்டும். அறியாமையின் காரணமாகச் செயல், உணர்வு, நாமரூபம், நுகர்ச்சி, வேட்கை, பற்று, சாதி, முதுமை, இறப்பு என்ற சங்கிலித் தொடரான வினைகள் தோன்றுகின்றன. இக்கருமத் தொகுதியிலிருந்து மீண்டும் பிறப்பும் துன்பமும் ஏற்படுகின்றன. எனவே, நல்லறிவு, நேர்மையான நோக்கம், எவ்வுயிரையும் தன்னுயிராகக் கருதும் பண்பு முதலியவைகளே முதன்மையானவையாகும். ஆனால், பௌத்தம் புலனடக்கத் தேவையைக் கூறுகிறதே தவிர புலன்களை ஒடுக்கும்படி கூறவில்லை. எனவேதான் இதனை நடுநிலைவழி (மத்தியமார்க்கம்) என்பர்.

 ISBN Number: 978-93-91115-26-5

மனிதரின் அறுதி நிலையாக வினைகளற்ற நிருவாணத்தைப் பௌத்தம் முன்மொழிந்துள்ளது.

**சாருவாக அல்லது உலகாயத அறவியல்**

இது, ‘வாழ்க்கையின் குறிக்கோள் இன்பம்’ என்னும் கருத்தையுடையது. உலகாயதர்கள், பொருள் முதல் கொள்கையினை (Materialists) உடையவர்கள், இவ்வுலகமும் இதிலுள்ள பொருள்களுமே உண்மை; புலன்களால் உணரமுடியாத ஆன்மா, கடவுள், மறுபிறப்பு என்பவையெல்லாம் பொய்; அதனால், இயன்றவரை இன்பத்தை நுகர்தல் நன்மை. ஒவ்வொருவரும் தம்முடைய இன்பத்தையே நாட வேண்டும். நன்மையும் தீமையும், தனி மனிதனால் அவனுக்குக் கிடைக்கும் இன்பம் அல்லது துன்பத்தை அளவுகோலாகக் கொண்டு முடிவு செய்யப்படுகின்றன என்பது இவர்களது கொள்கையாகும். இவர்களது வாதம், கிரேக்க சோபிசுடுகளின் வாதத்தை ஒத்ததாகும். இவர்கள், இன்பங்கள் எல்லாம் ஒரே தன்மை (Quality) யுடையவை என்றும், அளவு (Quantity) மட்டும் வேறுபடுகின்றன என்றும் கூறுகிறார்கள். சுருங்கக் கூறின், இன்பம் தரும் செயலே நல்லொழுக்கம் என்பது இவர்களின் கொள்கைகளாகும்.

**முடிவுரை**

வடமரபு வைதீக அறவியல் மரபு, அவைதீக

 ISBN Number: 978-93-91115-26-5

அறவியல் மரபு என இரண்டு கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதையும், இதில் வீடுபேற்றை அளிக்கும் செயலே அறச்செயல் என்பது வைதீக சமயத்தின் முடிபாகப் பெறப் பட்டதையும், வினைப்பயன் மனிதனை அணுகாமல் வீடுபேற்றை அடைவதற்கு வழிவகை செய்பவை அறநெறிகள் என்பது அவைதீக சமயத்தின் முடிபாகப் பெறப்பட்டதையும் இத்தலைப்பின் வழி நிறுவப்பட்டுள்ளன.

**துணைநூற் பட்டியல்**

[1] இராதாகிருஷ்ணன். எஸ்., இராகவன். வி. எஸ். வி., (மொழி பெயர்ப்பு), *இந்தியாவின் இதய ஒளி.* ராதா பதிப்பகம், சென்னை, 1968.

[2] கிருஷ்ணதத்தபட். ஸ்ரீ. *இந்து மதம்.* காந்திய இலக்கியச் சங்கம், மதுரை, இரண்டாம் பதிப்பு, 1989.

[3] திருநாவுக்கரசு. க. த. (ஆசிரியர்), வரதராசனார். மு. (பொ. ப. ஆ.). *திருக்குறள் நீதி இலக்கியம்.* சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1977.

[4] பார்த்தசாரதி அய்யங்கார், (உ. ஆ.). பகவத் கீதை. பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை, 1935.

[5] வீரமணி. கி. (ஆ.உ.). *மனுதரும சாஸ்திரம்.* திராவிடர் கழக வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு 2005.

 ISBN Number: 978-93-91115-26-5

[6] *வாழ்வியற் களஞ்சியம்.* - தொகுதி இரண்டு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-93-91115-26-5

# Virtue in *Thirumanthiram*

**Dr. K. Bhuvaneswari**, Assistant Professor of Tamil,
National College, Tiruchirappalli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3565-6101**
**DOI: 10.5281/zenodo.8149904**

## Abstract

*Thirumoolar is a Tamil Siddhar of the prime eighteen siddhars. "Thirumantiram" is a Tamil spiritual poetic work written by him. It is the tenth of the twelve volumes of Thirumurai. It consists of over three thousand verses dealing with various aspects of spirituality and Morality. Thirumoolar insists on virtues in "Thirumantiram". He speaks about moral virtues like not coveting another's wife (piranil vilayamai), abstinence from flesh (pulal aaruthal), and giving donations to others etc. This chapter book ponders over the morals that help us to reach the state of God.*

**Keywords:** Virtue, Thirumoolar, *Thirumanthiram*.

## References

[1] Ooran Adigal, (urai). Thiruvarur Pa, Samarasa Sanmargam Research Center, Vadalur, First Edition 2003.
[2] Sivamallika. *Thirumantiram*. Thirumantiram Trust Publications, Trichy, First Edition, 2022.
[3] Pandithamani M. Kathiresan Chettiar (Translation), *Edukkura Neethi Saram*. Indian Culture Research Center, Chennai, First Edition, 1998.


ISBN Number: 978-93-91115-26-5

[4] Varatharasan, M. *Thirukkural*. Thiruvarasu Book Center, Chennai, First Edition, 2013.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

 ISBN Number: 978-93-91115-26-5

# திருமந்திரத்தில் அறம்

**முனைவர் க. புவனேஸ்வரி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தேசியக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-3565-6101**
**DOI: 10.5281/zenodo.8149904**

**ஆய்வுச் சுருக்கம்**

*பதினெண் சித்தர்களுள் முதன்மையானவராகத் திகழ்ந்த திருமூலர் இயற்றிய "திருமந்திரம்" உயிர்கள் உய்வதற்குத் தேவையான பல்வேறு தந்திரங்களை உபதேசிக்கின்றது. பக்தி, வழிபாடு, யோகம் பற்றிக் கூறும் திருமந்திரம் இறைவனை அடைவதற்கு மனிதன் நல்லவனாக அறச்சிந்தனை உடையவனாகவும் இருக்க வேண்டியது அவசியம். திருமந்திரம் ஆன்மிக அறிவின் பெட்டகமாகவும் இன்றைய மக்களுக்கு பெரிதும் பயன் அளிக்கும் என்பது திண்ணம். அறவழி நிற்பவன் பெறும் நன்மைகள் அறத்தினின்று விலகக் கிடைக்கும் தீமைகள், பிறன்மனை நயவாமை, புலால் மறுத்தல், தானச் சிறப்பு என்று பல்வேறு தலைப்புகளில் திருமூலர் அறத்தின் மேன்மையை விளக்கியுள்ள தன்மை இந்த ஆய்வுக் கட்டுரையில் எடுத்துரைக்கப்பெற்றுள்ளது.*

**குறிப்புச் சொற்கள்:** அறம், திருமூலர், *திருமந்திரம்.*

**முகவுரை**

மனிதனின் சிறப்பான வாழ்விற்கு நான்கு வகையான உறுதிப்பொருட்கள் உதவுகின்றன. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பவையேயாம். அதனால்தான் பெருங்காப்பிய இலக்கணம் பேசும் தண்டியலங்காரமும் அறத்தையே முதன்மைப்படுத்தியது. அறவழியில் பொருளை ஈட்டி இன்பமாக வாழ்ந்தால் வீடுபேறு அமைவது உறுதி. இப்படி உலகில் உள்ள அனைவரும் நன்முறையில் வாழவும் வீடுபேற்றை அடையவும் தேவையான நல்ல கருத்துகளை எடுத்துக் கூறும் நூல் திருமந்திரம். இந்தத் திருமந்திரத்தில் இடம்பெற்றுள்ள அறச் சிந்தனைகளைப் பற்றி இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்பெறுகின்றது.

***திருமந்திரம்***

மூன்று விதமான தந்திரங்களை மூவாயிரம் பாடல்களில் எடுத்துக்கூறும் நூல் திருமந்திரம். திருமூலர் இந்நூலில் இறைவனை அடைவதற்கான பல்வேறு யோகநெறிகளை எடுத்துக் கூறுவதுடன் மனித வாழ்விற்குத் தேவையான அறநெறிக் கருத்துகளையும் வலியுறுத்துகிறார். சைவத்திருமுறைகள் பன்னிரண்டுள் பத்தாம் திருமுறையாய் இடம்பெற்றுள்ள இந்நூல் அவசியம் படித்துப் பயன்பெற வேண்டியதாகும்.

 ISBN Number: 978-93-91115-26-5

## அறம்

ஒரு நாட்டைப் பாதுகாக்க மலை, காடு, கடல், கோட்டை, அகழி போன்றவை அரண்களாக அமையும். அதுபோலவே மனித வாழ்வைப் பாதுகாத்து அவனை இறைநிலைக்கு உயர்த்துபவை அறச்செயல்களே ஆகும். அதனை உணர்ந்தே வள்ளுவரும் "அறன்வலியுறுத்தல்" என்றே ஓர் அதிகாரத்தை இயற்றியுள்ளார்.

**அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல (குறள் – 39)**

ஒருவன் அறம் செய்வதால் கிடைப்பதுவே உண்மையான இன்பம் என்கிறார் வள்ளுவர்.

## திருமந்திரத்தில் அறம்

வள்ளுவர் காட்டிய நெறியில் நின்றே பல்வேறு விதமான அறக்கருத்துகளைத் திருமூலரும் நமக்கு கூறியுள்ளார்.. திருமந்திரத்தின் முதல் தந்திரம் 293 பாடல்களைக் கொண்டது. இதில் இடம்பெற்றுள்ள பெரும்பான்மையான தலைப்புகளும் அதன் உட்பொருளும் அறன்வலியுறுத்தும் வகையிலேயே அமைந்துள்ளன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, தானச்சிறப்பு, அறம்செய்வான் திறம், அறம் செய்யான் திறம், கள்ளுண்ணாமை, நடுவுநிலைமை போன்றவற்றை மட்டுமின்றி கல்வி, கேள்வியின்

 ISBN Number: 978-93-91115-26-5

சிறப்புகளை உணர்த்தும் பொழுதும் யாக்கை, செல்வம், உயிர், இளமை நிலையாமை பற்றிக் கூறும் கருத்துகளிலும் அறத்தின் பயனைக் கூறியுள்ளார் திருமூலர். அதாவது முதல் தந்திரத்தில் இடம்பெற்றுள்ள இருபத்தியேழு தலைப்புகளுள் இருபது தலைப்புகளில் அறம் பற்றியே எடுத்துக் கூறியுள்ளார் திருமூலர். ஏனென்றால் அப்படி அறவழியே நடப்பவனால் இறைவனை அடைய முடியும் என்பதை வலியுறுத்தவே திருமூலர் இப்படிக் கூறியுள்ளார்.

**அறம் செய்வான் திறம்**

தம்மை அறிந்தவர்கள் என்றும் அறநெறியில் இருந்து விலகி இருப்பார்கள். அப்படித் தன்னை உணர்ந்து அறநெறியில் செல்பவர்க்கு சிவபெருமான் உறவாக இருப்பான்.

**யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே**
**(திருமந்திரம், பாடல் - 251)**

தானம் செய்வதற்குப் பொருளில்லை என்று யாரும் வருந்த வேண்டாம். என்ன இருக்கிறதோ அதைக் கொடுக்கலாம். எதுவும் இல்லையென்றாலும் பிறர் மனம் வருந்தாதபடி பேசுவதே ஓர் அறமாகும் என்கிறார்


ISBN Number: 978-93-91115-26-5

திருமூலர். இந்தத் திருமந்திரத்தை நன்குணர்ந்திருந்ததால் தான் பாரதியும்,

**நிதிமிகுந்தவர் பொற்குவைதாரீர்**
**நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர்**
**எதுவும் அற்றவர் வாய்ச்சொல்தாரீர்**

**(பாரதியார் கவிதைகள், ப. 5)**

என்கிறார். ஆக அறம் என்பது பொருளை தானமாக வழங்குவது மட்டுமன்று. நல்ல சொற்களைப் பிறரைப் புண்படுத்தாத சொற்களைக் கூறுவதும் அறச்செயலே. பஞ்மா பாதகங்களைச் செய்யாதிருத்தல், பிறருக்கு உதவி செய்தல், பரம்பொருளை நினைத்தல் இவையே உயிரின் துணை என்கிறார் திருமூலர்.

**அறம் செய்யான் திறம்**

பிறருக்குத் தான, தருமங்கள் செய்ய வேண்டும் என்று எண்ணாதவரிடம் இருக்கும் பணம் வீணாணது என்கிறார்.

**ஒட்டிய நல்லறம் செய்யாதவர் செல்வம்**
**பட்டிப் பதகர் பயன் அறியாரே**

**(திருமந்திரம், பாடல். 259)**

எட்டிப் பழத்தால் யாருக்கும் பயன் இல்லை. அதுபோலவே பணத்தை வட்டிக்குக் கொடுத்துச் சேர்த்து வைப்பர் கள்ளருக்குச் சமம். எனவே அறம் செய


ISBN Number: 978-93-91115-26-5

விரும்புங்கள்'' என்று ஔவை கூறியதைத் திருமூலரும் கூறியுள்ளார்.

**தானச்சிறப்பு**

''பாத்திரம் அறிந்து பிச்சையிடுங்கள்'' என்பது பழமொழி. ஆனால் திருமூலரோ பாகுபாடு பார்க்காமல் அவர், இவர், நல்லோர், தீயோர் என்று கருதாது செய்வதே சிறந்த தானம் என்கிறார்.

**ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்**
**பார்த்திருந்து உண்மின் பழம்பொருள்...**
**வேட்கையுடையீர் விரைந்தொல்லை உண்ணன்**
**மின் காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே**
**(திருமூலர், பாடல். 259)**

கிடைக்கும் சிறிது உணவையும் காக்கை ஒற்றுமையாய் பகுத்து உண்ணும். அதுபோல் பிறருக்குப் பகிர்ந்து காத்து வரவேண்டும்.

**செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு (குறள் - 86)**

எனும் குறளின் கருத்தை ''பார்த்திருந்து உண்மின்'' என்கிறார் திருமூலர். ஆக இன்னார், இனியர், என்னாது அனைவருக்கும் தானம் செய்வதே சிறந்தது.

**பிறன்மனை நயவாமை**

கணவனும் மனைவியும் இணைந்து தான தருமங்களைச் செய்வதாலேயே இல்லறமானது நல்லறம்


ISBN Number: 978-93-91115-26-5

என்று போற்றப்படும். அப்படிக் கற்புடைய தன் மனைவியை விடுத்துப் பிறர் மனைவியை விரும்புவதை அறவழியில் நிற்பவர்கள் செய்யமாட்டார்கள்.

**ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே**
**காத்த மனையாளைக் காமுறும் காளையர்**
**காய்ச்ச பாலெனின் கனி உண்ண மாட்டாமல்**
**ஈச்சம் பழத்துக்கு இடருற்றவாறே**

**(திருமந்திரம் பாடல் – 199)**

சுவைமிகு பலாப்பழத்தை விடுத்து முட்கள் நிறைந்த ஈச்சம் பழத்துக்கு ஆசைப்படுவது போல் தன் மீது அன்பு கொண்ட மனைவியை மறந்து பிறர் மனைவியை விரும்புவது. இது தீமையே பயக்கும் என்கிறார்.

**புலால் மறுத்தல்**

பொதுவாக நீதிக்கருத்துகளை அறத்தின் அருமையைக் கூறும் அனைத்து நூல்களும், சான்றோர் பொதுமக்களும் கொல்லாமை, புலால் மறுத்தல் இரண்டையும் நிச்சயமாகக் கூறியுள்ளனர். ஏனெனில் மனிதன் முதலில் தன் உணவுக்காகப் பிற உயிர்களைக் கொல்கிறான். பின்னர் அதுவே சிறிது சிறிதாக வளர்ந்து பழிஉணர்வு, கோபஉணர்வு என்று பிறரைக் கொல்லத் துணிகின்றான். எனவே கொல்லாதிருக்க புலால் மறுத்தல் அவசியமானது.

 ISBN Number: 978-93-91115-26-5

ஆடு, மாடு பன்றி, ஒட்டகம் என்று பலவிதமான விலங்குகளையும் உண்டு உண்டு மனிதன் தன் அறிவை இழந்து விலங்காகவே மாறிவிடுகிறான். அறத்தினின்று வழுவியும், நழுவியும் சென்றுவிடுகின்றான். எனவே பல மறச்செயல்களுக்கு அடிப்படை புலால் உண்ணலே என்கிறார் திருமூலர்.

**பொல்லால் புலாலை நுகரும் புலையரை**
**எல்லாரும் காண யமன்தன் தூதர்**
**செல்லாகப் பற்றித் தீயாய் நரகத்தில்**
**மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே**

**(திருமந்திரம். பாடல் – 198)**

உடலுக்கும், உயிருக்கும் தீங்குச் செய்யும் புலாலை உண்ணும் கீழானவர்களை யமத்தூதர்களை இழுத்துச் சென்று நரகத்தில் துன்பப்படுத்துவார்கள். கொல்லும் போது அவை எத்தகைய வேதனையை அடைந்ததுவோ அதே வேதனையை நாமும் அனுபவிப்பது உறுதி என்கிறார். அதனால் தான் யசோதர காவியம் உண்மைக் கோழியைக் கொல்லுவது மட்டுமல்ல மாவினால் செய்த கோழியைப் பலியிடலும் தவறு என்கிறது. ஏனெனில் பலியிடவேண்டும் என்பதே தவறு, என்று எண்ணுவதே தவறு என்பதை விளக்கவே திருமூலர் “புலால் மறுத்தல்” என்கிறார். அதனால் தான் இராமலிங்க சுவாமிகளும் இறைவனை அடையத் தேவையானவற்றைப்

 ISBN Number: 978-93-91115-26-5

பட்டியலிடும்போது புலால் மறுத்தலை மிகவும் வலியுறுத்திக் கூறுகின்றார். **வீணே பலிகவர் / சிறுநெறி சேராமே (ஆறாம் திருமுறை. ப.88)** மனிதன் தன் நாவின் சுவைக்காகப் புலால் உண்பது மட்டுமின்றி சிறு சிறு தெய்வங்கள் உயிர்க்கொலை புரியும் "பலிவேட்டலை" விரும்புகின்றன. இப்படி இறைவனின் பெயரைச் சொல்லி பலியிடும்வதும் தவறு. எனவே தான் இப்படி பலி கேட்கும் தெய்வங்களின் நெறியை சிறுநெறி, கீழானநெறி என்று கூறுகின்றார் வள்ளலார்.

**நிலையாமை**

உலகில் தோன்றிய அனைத்துமே நிலையற்றவை. அப்படி நிலையில்லாத உடல், உயிர், செல்வம், இளமை இவற்றையெல்லாம் சரியாகப் பயன்படுத்தி நிலையான இறைவனை அடைதல் வேண்டும்.

**அருளும் அரசனும் ஆணையும் தேடும்**
**பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னம்**
**தெருளும்... (திருமந்திரம்பாடல். 167)**

வலிமை பொருந்திய செல்வம் நிறைந்த அரசனே ஆனாலும் அறநெறியில் நின்று இறைவனை அடைதலே நன்மை பயக்கும் என்கிறார் திருமூலர். அழியும் அனைத்தையும் அறநெறி நிறுத்தி அழியா இன்பப்பேற்றை அடையுங்கள் என்று அறிவுறுத்துகின்றார்.


ISBN Number: 978-93-91115-26-5

> **எல்லா அறங்களையும் பாதுகாத்தால் சிறிய அரசனும் உயர்ந்த நன்மையை அடைவான். அவ்வறங்களை அழித்தலாற் பெரிய அரசனும் இழிந்த தன்மையை அடைவான். உலக மக்கள் அறத்தினும், மறத்தினும் புகுதற்குக் காரணம் அறமேயாகும். அவ்வரசனே உலகத்தில் மிகச் சிறந்தவனாகக் கருதப்படுவான்.**
>
> **(சுக்கிரநீதிசாரம், ப. 384)**

என்று பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் கூறுகிறார்.

**முடிவுரை**

அறம் செய்வதால் விளையும் நன்மைகளையும், அப்படி அறவழியில் நிற்பவன் இறைவனடியைச் சென்று அடைவர் என்றும் கூறுகின்றார் திருமூலர். மேலும், அறம் என்பதைத் தமிழ்ச் சான்றோர் ஒரு கொள்கையாகவோ, கோட்பாடாகவோ கருதவில்லை அதைத் தங்கள் வாழ்க்கை நெறியாகவே கொண்டு வாழ்ந்துள்ளனர் என்பதையும் அறிந்து இன்புறுகின்றோம்.

**துணைநின்ற நூல்கள்**

[1] ஊரன் அடிகள், (உரை). *திருவருட்பா.* சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர், முதற்பதிப்பு – 2003.

 ISBN Number: 978-93-91115-26-5

[2] சிவமல்லிகா, (உரை). *திருமந்திரம்.* திருமந்திரம் அறக்கட்டளை வெளியீடு, திருச்சி – முதற்பதிப்பு 2022.

[3] பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் (மொ.பெ.), *சுக்கிரநீதிசாரம்.* இந்தியப் பண்பாட்டு ஆய்வு மையம், சென்னை, 1998.

[4] மு. வரதராசனார், (உரை). *திருக்குறள்.* திருவரசு புத்தக நிலையம், சென்னை, முதற்பதிப்பு – 2013.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 **ISBN Number: 978-93-91115-26-5**

# Domestic Codes in the Didactic Literature

**Dr. R. Jaisankar**, Assistant Professor in Tamil, Bhrathidasan University Thiruchirappalli -24, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-2959-6384**
**DOI: 10.5281/zenodo.8149932**

## Abstract

*V. Subha Manikkam says that literature, charity and society are like rivers and streams. Under this statement, it can be seen through the songs of moral literature and it has been standing and waiting for the river-like society till today. This article examines how the numerous philosophies and ethics are recorded in Tamil literature. Our forefathers examined the pros and cons of the life they lived and accepted or agreed with the life ideas that shine as household principles. The principle is to have something as an idea on the intellectual level. The theory is the formulation and that principle has a formulation of norms. A theory contains many principles. As evidence, Gandhian doctrine includes principles like non-violence, abolition of untouchability, and abstinence from alcohol. In this chapter paper, the moral principles of domestic life mentioned in the Tamil moral literature are explored.*

**Keywords:** Ethics, Philosophy, Principles of Life, Non-violence, Abolition of Untouchability, Abstinence.

## References

[1] Ravi, G. *Pattupattil Aalumai Valarchi*. Chennai: Nila Suryan Publishing House, 2017.

[2] Krishnamurthy, J. *Samugaviyal Kotpadugal*. Chidambaram: Annamalai University, 2000.

[3] Chidambaran, Samy. *Pathnenkeelkanukum Tamilar Valvum*. Chennai: Knowledge Publishing House, 2003.

[4] Natarasan, The. Su. *Tiranaivuk Kalai*. Chennai: New Century Book House (B) Litt. 2005.

[5] Noel Joseph Ardararaj. *Vimarsana Kotpattu Yugam*. Trichy: Identity Publishing House, 2013.

[6] Parimelazagar, (U.A.). *Thirukkural*. Chennai, Women's Station, 1998.

[7] Bhaktavachal Bharati. *Tamilar Manidaviyal*. Chidambaram, Meiyappan Tamil Studies, 2002.

[8] Manavalan, A. A. *Irubatham Nootrandin Ilakiya Kotpadugal*. Chennai: World Tamil Research Institute, 2002.

[9] Jaishankar, Ira. *Tamilil Samugaviyal Tiranaivu*. Karaikudi: Thayaram Publishing House, 2007.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

 ISBN Number: 978-93-91115-26-5

# அற இலக்கியங்களில் இல்லறக் கோட்பாடுகள்

**முனைவர் இரா.ஜெய்சங்கர்,** உதவிப்பேராசிரியர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி – 24, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-2959-6384**
**DOI: 10.5281/zenodo.8149932**

### ஆய்வுச்சுருக்கம்

*இலக்கியமும் அறநூலும் சமுதாயமென்னும் ஆற்றுக்கு நீரும் கரையும் போல்வன என்பர் வ.சுப.மாணிக்கம். இக்கூற்றுக்கு இணங்க அறஇலக்கியங்கள் இன்றுவரை சமுதாயமென்னும் ஆற்றுக்குக் கரைபோல நின்று காத்து வருவதை அறஇலக்கியப் பாடல்கள் வழிக் காணமுடிகின்றது. இவ்வற இலக்கியங்களில் எண்ணற்ற வாழ்வியல் தத்துவங்கள்> வாழ்வியல் நெறிகள்> வாழ்வியல் கோட்பாடுகள் எவ்வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது. நமது முன்னோர்கள்> தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையின் நன்மை தீமைகளை ஆராய்ந்து, ஏற்றுக்கொண்ட அல்லது ஒத்துக்கொண்ட வாழ்வியல் கருத்துக்கள்தான் இல்லறக் கோட்பாடுகளாக (Principle) மிளிர்கின்றன. அறிவு நிலையில் ஒன்றைக் கருத்தாக வைத்திருப்பது கொள்கை.*

 ISBN Number: 978-93-91115-26-5

*அந்தக் கொள்கையை வரன்முறை செய்து> நெறிமுறைகளை உருவாக்கிக் கொள்வது கோட்பாடு ஆகும். ஒரு கோட்பாட்டில் பல கொள்கைகள் அடங்கியிருக்கின்றன. சான்றாக; காந்தியக் கோட்பாட்டில் – அகிம்சை - தீண்டாமை ஒழிப்பு - மது அருந்தாமை போன்ற கொள்கைகள் அடங்கியிருக்கின்றன. இந்நோக்கில் அற இலக்கியங்கள் கூறும் இல்லறக் கோட்பாடுகள் இவ்வாய்வுக் கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளது*

**திறவுச் சொற்கள்:** அறஇலக்கியங்கள், தத்துவங்கள், வாழ்வியல் கோட்பாடுகள், அகிம்சை, தீண்டாமை ஒழிப்பு, மது அருந்தாமை.

**முன்னுரை**

கிரேக்க நாகரிகம் உலக நாகரிகத்தின் தொட்டில் என்பர் வரலாற்று அறிஞர்கள். இக்கிரேக்க நாகரிகத்திற்கு இணையானதாகத் தமிழரின் சங்க கால நாகரிகத்தினையும் அதன் வீரயுகப் பாடல்களையும் குறிப்பிடுவர். சங்ககால மக்கள் வீரம், காதல், கொடை, கல்வி ஆகியவற்றால் மேன்மையுற்றுச் செல்வச் செழிப்போடும், நாகரிகத்தோடும் வாழ்ந்திருப்பதைச் சங்க இலக்கியங்கள் வழி முனைந்துரைப்பர். இயற்கையோடு இயைந்து வாழ்ந்த சங்ககால மக்கள் செல்வச்செழிப்பின்

 ISBN Number: 978-93-91115-26-5

மிகுதியாலும், இடைவிடாத போரினாலும், காலத்தின் கோலத்தாலும் சங்க காலத்தின் கடைசிப் பகுதியில் அறநெறிதவறி, பொய்யும் புரட்டும் மலிந்து பரத்தையொழுக்கம் மிகுந்தது. “வலிமை உள்ளது வாழும்” என்ற டார்வின் கோட்பாட்டிற்கு இணங்கச் சங்கத்தமிழரின் வாழ்வியல் முறை தடம்புரண்டது. தமிழ்ச்சமூகம் தடம் புரண்டு அழிவைச் சந்தித்த சூழலில், தெய்வப்புலவர் திருவள்ளுவர் போன்ற சமூகப் பற்றாளர்கள் நொடிந்து கொண்டிருந்த தமிழ்ச் சமூகத்தைத் தூக்கி நிமிர்த்த முனைந்தனர். அவ்வேட்கையின் விளைவே அறஇலக்கிய உருவாக்கம். இச்சூழலே இவ்வற இலக்கியங்கள் தோன்றியதற்கான பின்னணியாக இருக்க வேண்டும். அறஇலக்கியங்கள் நமது முன்னோர்கள் வாழ்ந்த வாழ்வியலின் சொல்லோவியங்கள் இச்சொல்லோவியங்களில் வாழ்வியல் சிந்தனைகளை, தத்துவங்களை, கொள்கைகளை, கோட்பாடுகளை அப்பற்றாளர்கள் நிரம்ப எடுத்து இயம்பியுள்ளனர். அவைகள்;

**இல்லறத்தில் ஈடுபடுவது**

மனித வாழ்வில் குறிப்பாகத் தமிழர் வாழ்வில் இல்லறமும் துறவறமும் இரு கண்களாகக் கருதத்தக்கன. இருப்பினும் ஒருவன் தன்னலம் ஒழித்துப் பிறர் நலம் நாட வேண்டுமாயின் இல்லறத்தில் ஈடுபடுவதே சிறப்பு என்ற

 ISBN Number: 978-93-91115-26-5

உயரிய சிந்தனையைப் பல அறஇலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. சான்றாக நான்மணிக்கடிகையில் 47ஆம் பாடலில்,

**மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை, மழையும்**
**தவம் இலார் இல்வழியில்லை தவமும்**
**அரசன் இலாவழியில்லை அரசனும்**
**இல்வாழ்வார் இல்வழி இல்**

**(சிதம்பரனார், சாமி, 2003)**

என்ற விளம்பி நாகனார், மழையில்லாவிட்டால் இவ்வுலகில் எவ்வுயிருக்கும் வாழ்வில்லை. மழையும் - தவம் செய்யக் கூடியவர்கள் இல்லையெனில் பொழியாது. தவமும் - அறநெறியைக் காக்கும் அரசன் இல்லாதவிடத்தில் இல்லை. அரசனும் - இல்லறத்தில் ஈடுபடக்கூடிய குடிமக்கள் இல்லாதவிடத்தில் இல்லை எனக் கூறியுள்ளார். இவ்வுண்மையை மக்களும், தற்கால ஆட்சியாளர்களும் நன்கு உணர்ந்து செயல்பட்டால் நாடுவளம் பெறும். மக்கள் மகிழ்வோடு வாழ்வர். இவ்வாறு அறஇலக்கியங்கள் தனிமனித வாழ்க்கைச் சிறப்பிற்கு இல்லறமே சிறந்தது. அந்த இல்லறம் களவின்வழி வந்த இல்லறமாக அமையின் மேலும் சிறப்பானதாக அமையும் என்பதைச் சுட்டியிருப்பதைக் காணமுடிகின்றது. “சமூகத்தின் முக்கிய அங்கங்களில் இல்லறமும் ஒன்று. சமூகம் சரியான பாதையில் இயங்க

 ISBN Number: 978-93-91115-26-5

அதன் அங்கங்களிடையே ஒரு நல்லிணக்கம் அல்லது இசைவு அவசியமாகிறது. அப்படிப்பட்ட இசைவுதான் சமூகத்தில் நல்லொழுக்கம் நிலவ ஆதாரமாக இருக்கிறது என்கிறார்'' ஆகஸ்ட் கோம்த் (கிருஷ்ணமூர்த்தி, ஜெ, ப. 45). இவரின் சிந்தனையானது மேற்காணும் பாடலுடன் ஒப்பு நோக்கத்தக்கதாக உள்ளது. அப்பாடலில் தவம் செய்வோர், அரசன், குடிமக்கள் ஆகியோர்களிடையே நல்லிணக்கம் மிக அவசியமாது. அப்பொழுதுதான் நாட்டில் மழை பொழியும், மழை பொழிந்தால் அனைத்து உயிர்களும் நலம் பெறும் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

மேலும், சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பம், அதுவே கூட்டுறவுக்கு ஆதாரமாகவும் அடையாளச் சின்னமாகவும் விளங்குகிறது. அத்துடன் மனிதனின் தன் முனைப்பை நீக்கி அவனைப் பிறருடன் இணைந்து வாழ வழி கோலுகிறது. எனவே சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதர்களும் தனித்தனியே கருத்துக்கள் கொண்டு இருந்தால் அவர்களிடையே கூட்டுறவு ஏற்பட வாய்ப்பில்லை என்றும் சமூகத்தில் கட்டுப்பாடற்ற முழுமையான கருத்துச் சுதந்திரம் சமூக ஒழுங்குக்கு கேடானது என்று ஆகஸ்ட் கோம்த் கூறியிருப்பது தொழில்நுட்பமும், ஊடகப்பெருக்கமும் வளர்ச்சியடைந்த தற்காலசூழலில் சிந்திக்கத் தக்கதாக அமைகிறது.

 ISBN Number: 978-93-91115-26-5

**இல்லறத்தார் கடமை**

இல்லாளோடு இணைந்து வாழ்வது இல்வாழ்க்கை. திருவள்ளுவர் அறத்துப்பாலில் இல்வாழ்க்கை முதலாக, புகழ் ஈறான இருபது அதிகாரங்களில் கற்பு வாழ்க்கை மேற்கொண்ட இல்லறத்தாரின் கடமைகளை விரிவாக விவரித்துள்ளார். மேலும் சிறுபஞ்சமூலம், ஏலாதி, திரிகடுகம், ஆசாரக்கோவை ஆகிய அறநூல்களில் இல்லறத்தார் கடமைகள் சிறப்பாகச் சுட்டிக் காட்டப்பெற்றுள்ளன. அக்கடமைகள் பின்வருமாறு:

**(1) நன்மக்களைப் பெறுவது**

குழந்தைச் செல்வத்தினால் குடும்பம் கலகலப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். இல்லறப் பள்ளியின் வளர்ச்சி நிலையாக மக்கட் செல்வம் அமைகிறது. கணவன் மனைவியின் அன்பு முதிர்ச்சியாய்க் குழந்தைச் செல்வம் உருவெடுக்கிறது. வள்ளுவப் பெருந்தகை மக்கட்பேறு என்னும் அதிகாரத்தில்,

**பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**
**மக்கட்பேறு அல்ல பிற (பரிமேலழகர், 1998)**

இல்லறத்தில் ஈடுபடுவோர் பெறத்தகுந்த பேறுகளில் தலையாயது, அறிவார்ந்த மக்கட்பேறு. மற்ற பேறுகள் அனைத்தும் மிகுந்த பயனில்லாதவை என்கிறார்.

 ISBN Number: 978-93-91115-26-5

பெற்றோர் பழியல்லாத நல்ல பண்புடைய பிள்ளைகளைப் பெறும்போது அவர்களுக்கு ஏழுபிறப்பிலும் துன்பம் வந்து சேராது. உலகத்து உயிர்களுக்கும் அதனால் மிகுந்த பயன் உண்டாகும் என்கிறார்.

மழலைச் செல்வத்தின் மகிழ்ச்சியில் திளைக்கும் பெற்றோர் தம் பிள்ளைக்கும் செய்யத்தக்க நல்ல உதவி என்னவெனில், கற்றவர் மிகுந்த சபையில் தங்களுடைய பிள்ளைகள் கல்வி, கேள்விகளில் மேம்பட்டு முன்னே நிற்கும் படியாக உருவாக்குவதே பெற்றோரின் கடமை என்கிறார். “சமூக முன்னேற்றத்திற்கும் இயக்கத்திற்கும் மனித சிந்தனையும் அறிவும் தான் ஆதாரம். இந்த அறிவு சிந்தனையானது மூன்று நிலைகளில் அமைகிறது.

- **இறையியல் நிலை**
- **இயல் கடந்த நுண்பொருள் கோட்பாட்டியல் நிலை**
- **புற மெய்மைய நிலை.**

மனித மனம் இந்த நிலைகளில் முதிர்ச்சியடைந்து, பரிணாம வளர்ச்சி அடைந்து, சமூகத்தில் நிலை அமைப்பு பெறுகிறது என்கிறார்’ ஆகஸ்ட் கோம்த் (கிருஷ்ணமூர்த்தி, ஜெ, 2000, ப. 48). இச் சிந்தனைக்கு ஏற்ப பெற்றோர்கள், பண்புடையவர்களாகவும் அறிவார்ந்த பொது நோக்குடையவராகவும் இருக்கும் பட்சத்தில் அறிவார்ந்த மக்களை உருவாக்க முடியும்.

 ISBN Number: 978-93-91115-26-5

அறிவார்ந்த மக்களை உருவாக்கினால் மட்டுமே சமூகத்தில் முன்னேற்றத்தைக் காண முடியும். மக்கள் தொகை மிகுந்த நம் நாட்டில் அறிவார்ந்த சமூகம் உருவாக வள்ளுவர் கூறியது போல் பெற்றோர்கள், ஆசிரியர்கள், சான்றோர்கள், ஆட்சியாளர்கள் ஆகியோர் தங்களுடைய கடமைகளை உணர்ந்து செயலாற்றுவது காலத்தின் தேவையாக உள்ளது. அதைத் தவிர்த்து ஆட்டுமந்தை சமூகத்தை உருவாக்குவதில் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை என்பதை வள்ளுவர் மற்றும் ஆகஸ்ட் கோம்த் கூற்று உணர்ந்து கொள்ள முடிகிறது.

**(2) விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்பது தமிழ் இனத்திற்கே உரிய தனிச்சிறப்பு. அனைவரிடமும் அன்பு நிறைந்த வாழ்க்கை மேற்கொள்பவரால் மட்டுமே சிறப்பான விருந்தோம்பலைச் செய்ய முடியும். இதனை வள்ளுவர்;

> **இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி**
> **வேளாண்மை செய்தற் பொருட்டு**
>
> **(பரிமேலழகர், 1998)**

என்கிறார். மேலும்,

- **அமிழ்தமே ஆனாலும் விருந்தினர் புறம் இருக்க உண்ணக் கூடாது.**

 ISBN Number: 978-93-91115-26-5

- **நாள்தோறும் விருந்தினரைப் போற்றிவாழும் இல்லத்தாரின் வாழ்க்கை துன்பத்தால் கெட்டுப் போவதில்லை.**
- **விருந்தினரைப் போற்றுபவரின் இல்லத்தில் திருமகள் வாழ்வாள்.**
- **விருந்தே புதுமை என்ற தொல்காப்பியரின் வாக்கிற்கு இணங்க, புதியவராய் (அறிமுகம் இல்லாதவராய்) வீடு தேடி வரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று விருந்து பேணுவதே**

முதன்மையான கடமைஎன்கிறார் வள்ளுவர்.

> **பண்பாடு என்பது ஓர் இனமானது தான் வாழ்வதற்காக ஏற்படுத்திக் கொள்ளும் தகவமைப்பு முறை (Adaptive system) என்று அணுகுவது ஒரு முறை, மாறாக; வாழ்வதற்கான அறிவுமுறையின் வெளிப்பாடு (System of ideas) என்று அணுகுவது மற்றொரு முறை (பக்தவச்சல பாரதி, 2002, ப. 215)**

இச் சிந்தனைக்கு ஏற்ப விருந்தோம்பல் என்பது தமிழினத்தின் பண்பாடாகவும் அறிவு முறையின் வெளிப்பாடாகவும் தமிழர்களின் வாழ்வியலில் இன்றளவும் திகழ்ந்து வருவதைக் காண முடிகிறது. இச்சிறந்த பண்பாட்டிற்கு அடித்தளமாக சங்க இலக்கியங்களும் அற இலக்கியங்களும் திகழ்கின்றன.

 ISBN Number: 978-93-91115-26-5

சான்றாக, ஏலாதி என்னும் அறநூலில் விருந்தினரை எவ்வாறு வரவேற்று உபசரிக்க வேண்டும் என்பதைத் (பா. 6) தெளிவாக விளக்கிக் கூறுவதைக் காணமுடிகிறது.

> **இன்சொல், அளவால், இடம், இனிது ஊண்**
> **யாவர்க்கும் வன்சொல் களைந்து வகுப்பானேல் -**
> **மென்சொல்முருந்து ஏய்க்கும் முட்போல்**
> **எயிற்றினாய்! நாளும் விருந்து ஏற்பர் விண்ணோர்**
> **விரைந்து (சிதம்பரனார், சாமி, 2003)**

இப்பாடல், தன் வீடு நோக்கி வரும் விருந்தினரை இன்சொல்லால் வரவேற்று உரையாடல் வேண்டும். தங்குவதற்கு இடமும், உடுக்க உடையும், உண்ண உணவும் அளிக்க வேண்டும். இவ்வாறு விருந்தினரை உபசரிப்பவனைத் தேவர்கள் தமது விருந்தினராக ஏற்றுக் கொள்வார்கள் என்கிறது. கூட்டுக்குடும்பம் சிதைந்து தனிக்குடும்பம் பெருகும் இச்சூழலில், உறவைப் பேணுவதில் விருந்தோம்பல் பண்பு மிக அவசியமாகிறது.

**(3) அறச்செயலில் ஈடுபடுதல்**

மனித சமூகத்தில் ஒருவன் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து மிகுந்த துன்பத்தையும்> துயரத்தையும் அடைவது ஒருவகை. செல்வந்தக் குடும்பத்தில் பிறந்த ஒருவர், காலத்தின் கோலத்தால் வறுமையில் உழல்வது மற்றொருவகை. இவ்விரு சூழலிலும் திண்டாடும் மக்களுக்கு உதவி செய்து

 ISBN Number: 978-93-91115-26-5

வாழ்வது மிகச்சிறந்த அறமாகும். இதை உணர்ந்த சான்றோர் பெருமக்கள்,

- **அறம் செய விரும்பு – ஔவையார்**
- **அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை – திருவள்ளுவர்**
- **இல்லற மல்லது நல்லறமன்று – கொன்றை வேந்தன்**

என அறம் செய்தல் பற்றிப் பல நிலைகளில் கூறியிருப்பினும், வள்ளுவப் பெருந்தகை அறச்செயலை இருநிலையில் கூறியுள்ளார்.

**(1) தனிமனித அறம்**

**(2) சமுதாய அறம்**

ஆகிய இவ்விரு அறங்களையும் பல நிலைகளில் வள்ளுவர் விவரித்துள்ளார்.

- **பிறனில் விழையாமை அறம்**
- **கொல்லாமை – அறம்**
- **அவாவிற்கு அஞ்சி வாழ்தல் அறம்**
- **வெகுளியைக்காப்பது அறம்**
- **இனிமையுற நோக்குதல் அறம்**
- **மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
- **அறப்பண்புகளைக் கொண்டிருப்போர் அறவோர்**
- **அறப்பண்புகளை ஆழிப்போல் கொண்டிருப்போர் இறைவன்**

 ISBN Number: 978-93-91115-26-5

இவ்வாறு தனிமனித அறத்தை வள்ளுவர் சுட்டிக் காட்டியுள்ளார். சமுதாயத்தின் அறமாக வள்ளுவர் கூறுவது – 'இல்வாழ்க்கை'.

**அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன்பழிப்பது இல்லாயின் நன்று**

**(பரிமேலழகர், 1998)**

அறம் என்பது உணவளிப்பது மட்டும் அன்று. மேற்கண்ட உயரிய பண்புகளைப் பெற்று இல்வாழ்வில் ஈடுபட்டு, பிறர் பழிக்காவண்ணம் வாழ்வதே மிகச்சிறந்த அறச்செயல் என்பதை வள்ளுவர் தெளிவுபடுத்தி இருப்பதைக் காணமுடிகிறது. **எந்த முடிவும் அபத்தமும் அதிருத்தியும் துன்பமும் நிறைந்ததே, எனினும் முடிந்தவரை எண்ணிப் பார்த்துச் சுய விமர்சனச் சக்தியோடும் சுய சிந்தனையோடும் முடிவெடுத்து, எடுத்த முடிவை நிறைவேற்றி வாழ்வின் இருளைப் போக்குவது மனிதனின் சுய கௌரவமான வாழ்வாகும். சுய உணர்வும், சுய தேர்வும் அதன் விளைவனைத்தையும் தாங்கும் நேர்மையும் உள்ளவனே வாழ்க்கையை நல்ல விசுவாசத்துடன் (In good faith) சந்திக்கிறான். (நோயல் ஜோசப் இருதயராஜ், 2013, ப. 8)** என்பது இருபதாம் நூற்றாண்டின் நவீனத்துவ இலக்கிய தத்துவாதியான சார்த்ருவின் சிந்தனை வள்ளுவர் மற்றும் சார்த்ரு இவ்விருவரின் சிந்தனைகளை அடியொட்டி ஒவ்வொரு

 ISBN Number: 978-93-91115-26-5

மனிதனும் சுயநலம் சார்ந்த வாழ்வை முடிந்தவரைத் தவிர்த்து பொதுநலம் சார்ந்த வாழ்வை மேற்கொண்டு சுய கௌரவத்தோடும் பிறர் வாழ்வின் இருளைப் போக்குபவராகவும் திகழும் பொழுது ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் அர்த்தம் உடையதாக மாறும் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

**இல்லாளின் மாண்பு**

இல்லாள் என்ற சொல் இல்லத்தை ஆளும் மாட்சிமை பெற்ற தலைவியைக் குறிக்கும். இல்லத்தை ஆளுகின்ற பொறுப்பினைப் பெற்ற பெண்ணிற்கு இருக்க வேண்டிய மாண்பிளை வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் சிறப்பாகச் சுட்டிக் காட்டியுள்ளார். இல்வாழ்வில் ஈடுபடும் பெண் குடும்பத்தின் வருவாய்க்குத் தக்க வாழ்க்கை நடத்த வேண்டும்.மனைவி நற்பண்பு உடையவளாக அமைந்து விட்டால், வாழ்வில் இல்லாதது ஒன்றுமிலை. நற்பண்பு இல்லையெனில் எவையிருந்தும் பயன் இல்லை.

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை (பரிமேலழகர், 1998)**

என்கிறார். மற்றொரு அறநூலான சிறுபஞ்சமூலத்தில் இல்லாளின் சிறப்புச் சுட்டிக் காட்டப்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

**வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து, சுற்றம்**

 ISBN Number: 978-93-91115-26-5





**வெருவாமை வீழ்ந்து, விருந்தோம்பிக் – திருவாக்குந் தெய்வத்தையும் எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு செய்வதே பெண்டிர் சிறப்பு**

**(சிதம்பரனார், 2003)**

இப்பாடலில் ஆசிரியர் காரியாசான். மனைவியானவள் வருவாய்க்கு ஏற்பச் செலவு செய்தல் வேண்டும். உறவினர்களை விரும்பிப் போற்ற வேண்டும், தெய்வத்தை எஞ்ஞான்றும் மறவாமல் வழிபாடு செய்தல் வேண்டும். இவையே மனைவியின் சிறந்த பண்பாகக் குறிப்பிட்டிருப்பதைக் காணமுடிகிறது.

இல்வாழ்க்கையின் அச்சாணியாகத்; திகழ்பவள் பெண். அப்பெண் முதலில் தன்னுடைய உடல் நலத்தையும், உள்ள நலத்தையும், கற்பொழுக்கத்தையும் தற்காத்துக் கொள்ள வேண்டும். பின்பு தன்னுடைய கணவனின் உடலையும், உள்ளத்தையும் பாதுகாக்க வேண்டும். இதுவே சிறந்த மாண்பு என்கிறார் வள்ளுவர்.

**தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்**

**(பரிமேலழகர், 1998)**

இக்குறளில் ‘பேணி’ என்ற சொல், சொல் நயமும், பொருளாழமும் மிக்க சொல்லாகும். கணவன் நெறிதவறிச் சென்றால், அவனைத் தடுத்து, திருத்தி நல்வழிக்குக் கொண்டு வருபவள்தான் ஆற்றுலுடைய பெண். மேலும்


ISBN Number: 978-93-91115-26-5

பேணுதலில் சிறந்தவள் பெண். ‘பேண்’ என்ற சொல்லே பெண் என்றாயிற்று என்பது தமிழ் அறிஞர்களின் கருத்தாகும். மற்றொரு அறநூலான திரிகடுகத்தின் 64.ஆம் பாடல் இல்லத்தரசியின் ஒட்டுமொத்தப் பண்பு நலனையும், கடமையுணர்வையும் புலப்படுத்தும் விதமாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. **நல்விருந்து ஓம்பலின் நட்டாளம்; வைகலும்** / **கற்புடையாள் பூண்ட கடன் (சிதம்பரனார், 2003)** இப்பாடலில் ஒரு பெண்ணாவள், தனது இல்லம் நாடிவரும் விருந்தினரை வரவேற்று நல்லமுறையில் அவர்களை உபசரிப்பதால், கணவனுக்குச் சிறந்த நண்பனாகிறாள். இல்லறத்தை எச்சூழலிலும் வழுவாமல் காத்தலால் கணவனுக்குப் பெற்ற தாயாகிறாள். காக்கும் தகுதியுடைய மக்களைப் பெற்றதனால் மனைவியாகிறாள் என்பதனை நல்லாதனார் கூறியிருப்பது அனைவரும் மனங்கொள்ளத் தக்கதாக அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

> **ஒரு மனிதனுடைய வாழ்க்கை முறைக்கும் நடத்தை முறைக்கும் அவன் சார்ந்துள்ள சமூகச் சூழல் தான் காரணமாக இருக்கிறது. மேலும் சமூகச் சூழல் தான் மனிதனின் ஆளுமை வளர்ச்சியைத் தீர்மானிக்கிறது. சமூக மாற்றம் பெறுவதன் வாயிலாக ஆளுமை வளர்ச்சி**


**ISBN Number: 978-93-91115-26-5**

**அடைகிறது என்பது உளவியல் அறிஞர்களின் கருத்தாக அமைகிறது (இரவி, கெ, .2017, ப. 46)**

இச் சிந்தனையை உள்வாங்கி அற இலக்கியப் பாடல்களை ஆராய்கின்ற பொழுது, அப்பாடல்களை இயற்றிய புலவர்கள் மிகச்சிறந்த ஆளுமை பண்புடையவராகத் பெண்கள் திகழ வேண்டும் என்பதில் மிகக் கவனமாக இருந்திருப்பதைக் காண முடிகிறது. அதற்கான வழிமுறைகளையும் பாடல்களில் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது. மேலும், உலகமயமாதல் எனும் இன்றையச் சூழலில் பண்பாட்டின் துரித வளர்ச்சி, கலாச்சார வளர்ச்சி. மக்கள் தொகை இடப்பெயர்ச்சி. மற்றும் மக்கள் தொகைப் பெருக்கம் அதனால் ஏற்படும் நகரமயமாதல். இயந்திரமயமாதல். வேலை வாய்ப்பு ஆகிய காரணங்களால் சமூகக் கட்டுப்பாடுகள் காலப்போக்கில் மாற்றத்துக்கு உள்ளாகும் இவற்றைத் தவிர்க்க இயலாது. இதனை நன்குணர்ந்து இல்லறத்தில் ஈடுபடுவோர் தங்களுடைய ஆளுமையை வளர்த்துக் கொள்வது அவர்களுடைய நல்வாழ்விற்கு வழிவகுக்கும் என்பதில் இரு வேறு கருத்துக்கு இடமில்லை.

**இல்லத்தானின் சிறப்பு**

சங்க இலக்கிய அகமரபை அடியொற்றி இன்பத்துப்பாலை வள்ளுவர் உருவாக்கியுள்ளார்.

 ISBN Number: 978-93-91115-26-5

இருப்பினும், சங்க இலக்கியங்களில் காணக் கூடிய பரத்தையர் ஒழுக்கத்தை உதறித்தள்ளி, பெண்கள் எப்படிக் கற்புநெறியோடு இருக்க வேண்டும் என்று கூறினாரோ அதைப்போன்று ஆண்களும் கற்பொழுக்கம் உடையவராகத் திகழ வேண்டும் என்பதில் உறுதியாக இருந்திருப்பதைக் காணமுடிகிறது. மேலும், அவர் ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்கு ஒருவன் என்பதை இல்லறநெறியாகச் சுட்டிக்காட்டியிருப்பதை அறிய முடிகிறது. பெண்ணுக்கு திண்மையும் ஆணுக்கு மனநெர்மையும் உண்டு. இச்சஞ்சலத்துடன் ஆடவனுக்குச் செல்வப்பெருக்கு ஏற்படும்போது அவன் பரத்தை யொழுக்கம் கொண்டவனாக மாறுகிறான். இதனை நன்கு உணர்ந்த வள்ளுவர் பிறனில் விழையாமை, வரைவின் மகளிர் ஆகிய இரு அதிகாரங்களில் பரத்தை ஒழுக்கத்தைக் கண்டித்திருப்பதைக் காணமுடிகிறது.

**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு**

**(பரிமேலழகர், 1998)**

திருவள்ளுவர் பிறனில் விழையாமையை மிகச்சிறந்த அறம் என்கிறார். மேலும் அது அறம் மட்டுமல்ல; சான்றோர்க்கு ஒழுக்க நெறியாகவும் அமையும் என்கிறார். ஒருவன் அறம் அல்லாதவைகளை எவ்வளவு செய்தாலும்

 ISBN Number: 978-93-91115-26-5

பரவாயில்லை, பிறனுடைய மனைவியை விரும்பாமல் இருத்தல் நல்லது என்கிறார். பணத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு வாழும் பொதுமகளிரின் இனிய சொல்லை ஒருவன் நம்பினால், அது அவனுக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுக்கும். மேலும்,

**பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்**
**இருட்டறையில்**
**ஏதில் பிணந்தழீஇ யற்று (பரிமேலழகர், 1998)**

எனப் பொதுமகளிரை நாடும் ஆண்களை மிகக் கடுமையாகவே வள்ளுவர் சாடியிருப்பதைக் காணமுடிகிறது. இவ்வாறே,

**பிறர் மனைவியைத் தீய நோக்கில் பார்க்காத குருடனாய் இருப்பது நலம் என்கிறது நாலடியார் (ப. 158)**

**பலதார மணம் தவறு, பல பெண்களை மணப்பவன் வறுமையில் வாடுவான் என்கிறது நான்மணிக்கடிகை (ப. 15)**

**பரத்தையர் இல்லம் செல்பவனை நாய் என்கிறது சிறுபஞ்சமூலம் (ப. 88)**

மேற்கண்டவாறு பிறன்மனைநோக்காப் பேராண்மை உடையவர்களாக ஆண்கள் இருக்க வேண்டும் என்பதை அறஇலக்கியப் புலவர்கள் எடுத்துரைத்துப் பெண்களைப் போலவே ஆடவர்களும் கற்பொழுக்கத்துடனும்,

 ISBN Number: 978-93-91115-26-5

கட்டுப்பாட்டுடனும் செயல்படும் போதுதான் ‘இல்லறம் நல்லறமாக’ இருக்க முடியும் என்பதைப் பல பாடல்களில் எடுத்து இயம்பியுள்ளனர்.

> **மானுட வாழ்க்கையின் சமூகவியற் கூறுகளை ஆராய்ந்து அதற்கான அடிப்படைகளைக் கண்டறிந்த அறிஞர் காரல் மார்க்சு ஒரு சமுதாயத்தின் வாழ்வியல் பார்வை மாற மாற அச்ச சமுதாயத்தின் மேலமைப்புகளாகிய அரசியலிலும் அதிகார அமைப்பிலும் வர்க்க அமைப்பிலும் கலை இலக்கியங்களிலும் அம் மாற்றங்களின் சாயல் வெளிப்படும். இத்தகைய மாற்றங்களின் தொடர்ச்சியே அவ்வச் சமுதாயத்தின் வரலாறாக மாறுகிறது (மணவாளன், அ. ப. 46)**

இச் சிந்தனையை அடி ஒட்டி தமிழ்ச்சமுகத்தை ஆராய்கின்ற பொழுது: சங்ககாலகட்டத்தில் பரத்தை ஒழுக்கம் அவ்வளவாக கண்டிக்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது. ஆனால் அற இலக்கிய காலகட்டத்தில் வள்ளுவர் போன்ற அற இலக்கியச் சான்றோர்களின் சமூகப் பார்வையில் மாற்றம் ஏற்பட்டு பரத்தையர் ஒழுக்கத்தை வன்மையாக கண்டித்திருப்பதை அறிய முடிகிறது. தற்கால இலக்கியப் படைப்புகளிலும் ஊடகம் சார்ந்த படைப்புகளிலும் தமிழ் சமூகத்தின் காதல் வாழ்வும்

 ISBN Number: 978-93-91115-26-5

நெறி தவறிய வாழ்வும் பதிவு செய்யப்படுவதை காண முடிகிறது. அதன் விளைவுகளையும் தமிழ்ச் சமூகம் சந்தித்து வருகிறது. ஒருவனுக்கு ஒருத்தியாக வாழ்வது தமிழினத்தின் இல்லற கோட்பாடு என்பதைத் தமிழ்ச் சமூகம் உணர்ந்து செயல்படுவது தமிழ்ச்சமூகத்தின் மரபையும் பண்பாட்டையும் காக்கும் விதமாகவும் வரலாறாகவும் அமையும்.

**நன்றி மறவாதிருத்தல்**

இல்லறத்தில் ஈடுபடுவோருக்குப் பல சோதனைகளும், வேதனைகளும் நிகழக்கூடும். அச்சோதனைகளையும், வேதனைகளையும் சாதனைகளாக மாற்றுகிறார்களோ இல்லையோ? சோர்வில்லாதவர்களாக இருக்க வேண்டும். தக்க நேரத்திலும் இக்கட்டான சூழலிலும் உதவி செய்தவர்களை எப்போதும் மறத்தல் கூடாது. தினையளவு ஒருவர் உதவி செய்தாலும் அதனை; பனையளவாகக் கருதுகின்ற பண்பு இல்லத்தாரிடம் வளரவேண்டும். ஒருவர் செய்த நன்றியை மறந்தவனுக்கு எந்தக் காலத்திலும் உய்வில்லை என்கிறார் வள்ளுவர்.

**தமிழறிஞர் தமிழண்ணல் தனது சங்க இலக்கிய ஒப்பீடு என்னும் நூலில் சமூகத்தின் விழுமியங்களாக; நட்பு, நேர்மை, உண்மை,நாட்டுப் பற்று, பெரியோரை மதித்தல்,**

 ISBN Number: 978-93-91115-26-5

**பிறன்மனை விழையாமை, காதல், மனிதநேயம், அன்பு, வீரம், சமூக நீதி, நன்றி மறவாமை ஆகிய உணர்வு ஒரு சமூகத்தின் பண்பாடு செழித்தோங்க மிகத் தேவை என்பதைக் குறிப்பிடுகிறார்.**

**(இரவி, கெ,. 2017, ப. 49).**

இச்சிந்தனையானது இல்லறத்தில் ஈடுபடுபவருக்கு மட்டுமல்ல அனைவருக்கும் பொருந்தும். ஒரு மனிதனுடைய வளர்ச்சியில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், உறவினர்கள், நண்பர்கள் என்று ஏதோ ஒரு வகையில் உதவி புரிந்திருப்பார்கள் அந்த உதவியானது கடுகளவு இருப்பினும் அவர்களுக்கு நன்றி மறவாமல் இருப்பது ஒரு மனிதன் முழு ஆளுமையை அடைவதற்கு வழி வகுக்கும்.

**தொகுப்புரை**

இல்லறம் துறவறத்திற்கு வழிகாட்டுதலாக அமைவதால், ஒருவன் தன்னலம் மறந்து பொதுநலத்திற்கு ஈடுபடுவதற்கு, இல்லறமே சிறந்தது என்பதை அற இலக்கியங்கள் வலியுறுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. இல்லறமே மிகச்சிறந்த அறம், அவ்வறத்தில் ஈடுபடுவோர் அன்போடும், அடக்கத்தோடும், ஒழுக்கத்தோடும், பழிக்கு அஞ்சி நடப்பவராகத் திகழ வேண்டும். இல்லறத்தில் ஈடுபடுவோர் பெறத் தகுந்த பேறுகளில் சிறப்பானது மக்கட்பேறு. எனவே இல்லறத்தார் நன்மக்களைப் பெற்று, அவர்களைக் கல்வி, கேள்விகளில்


ISBN Number: 978-93-91115-26-5

வல்லவர்களாக்குதல் பெற்றோரின் முதன்மையான கடமையாகும். தமிழ்ப்பண்பாட்டின் ஆணிவேர் விருந்தோம்பல். விருந்தினை இன்முகத்துடன் வரவேற்று அவர்களுக்கு அனைத்து உதவிகளும் செய்பவரின் இல்லத்தில் திருமகள் தங்குவாள்; குடும்பமும் சிறப்புறும் என்பதை அறநூல்கள் சுட்டிக் காட்டியுள்ளன. மனைவி என்பவள் மந்திரி போலவும், மாட்சிமை பொருந்தியவளாகவும், தன்னைக் காத்துக் கொள்பவளாகவும், சோர்வில்லாதவளாகவும் இருக்க வேண்டும். இத்தகைய சிறப்பினைப் பெற்ற பெண்ணால் மட்டுமே அறவழியில் நின்று இல்லறம், நடு நிலைமையுடன் நடத்தி வாழ முடியும். பேராசை தவிர்த்து, பொறுமையுடன் உலக நடப்பை அறிந்து குடும்பத்தை நடத்த வேண்டும். மதியார் தலைவாசல் மிதித்தல் கூடாது. கல்வி அழகே அழகு, கள்ளுண்ணல் அறவே கூடாது போன்ற வாழ்வியல் நெறிகளைச் செவ்வியல் அறவிலக்கியங்கள் சிறப்பாகச் சுட்டிக் காட்டியிருப்பதைக் காண முடிகின்றது. இதைப் பின்பற்றுகின்ற போது நமக்கும் சமூகத்திற்கும் மிகுந்த பயன் அளிக்கும் என்பதில் ஐயம் வேண்டாம். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்ற கூற்றுக்கிணங்க, இல்லற வாழ்வில் ஈடுபடும் ஒவ்வொருவரும் மனதளவில் பக்குவம் உடையவர்களாகவும் தூய்மை உடையவர்களாகவும்


**ISBN Number: 978-93-91115-26-5**

மாற்றம்பெற்று, அற இலக்கியச் சான்றோர்கள் சுட்டிக்காட்டியுள்ள இல்லற கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பது காலத்தின் தேவை என்பதைக் இவ்வாய்வுக் கட்டுரைச் சுட்டிக்காட்டுகிறது.

**துணை நூல்பட்டியல்**


[1] இரவி, கெ. *பத்துப்பாட்டினில் ஆளுமை வளர்ச்சி.* சென்னை: நிலா சூரியன் பதிப்பகம், 2017.

[2] கிருஷ்ணமூர்த்தி, ஜே. *சமூகவியல் கோட்பாடுகள்.* சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 2000.

[3] சிதம்பரனார், சாமி. *பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும்.* சென்னை: அறிவு பதிப்பகம், 2003.

[4] நடராசன், தி. சு. *திறனாய்வு கலை.* சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். 2005.

[5] நோயல் ஜோசப் இருதயராஜ். *கோட்பாட்டு விமர்சன யுகம் விமர்சனக் கோட்பாட்டு யுகம்.* திருச்சி: அடையாளம் பதிப்பகம், 2013.

[6] பரிமேலழகர், (உ.ஆ). *திருக்குறள்.* சென்னை, திருமகள் நிலையம், 1998.

[7] பக்தவச்சல பாரதி. *தமிழர் மானிடவியல்.* சிதம்பரம், மெய்யப்பன் தமிழாய்வகம், 2002.

[8] மணவாளன், அ. அ. *இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள்.* சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2002.


 ISBN Number: 978-93-91115-26-5

[9] ஜெய்சங்கர், இரா. *தமிழில் சமூகவியல் திறனாய்வு.* காரைக்குடி: தாயறம் பதிப்பகம், 2007.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-93-91115-26-5